வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 10.02.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 63 | பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டி கேட்பது பௌத்த பிக்குகளை தூண்டிவிடும் செயல்

## சபையில் குறிப்பிட்டார் மைத்திரிபால

கொழும்பு, பெப்ரவரி 10

"தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டியைக் கோருவதானது, பெரும்பான்மையின மக்களையும், பௌத்த பிக்குகளையும் தூண்டிவிடும் செயலாகவே நாம் பார்க்கிறோம்."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

11



## ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவார் பஸில்?

கொழும்பு, பெப். 10

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பஸில் ராஜ பக்ஷ போட்டியிடுவார் என்று அவருக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக பஸில் ராஜபக்ஷ அமெரிக்க

11



## இந்திய அமைச்சர் குழு யாழ்ப்பாணம் வந்தது!

யாழ்ப்பாணம், பெப். 10

இந்தியாவின் மீன்வள இணை அமைச்சர் எல். முருகன், இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் க. அண்ணாமலை ஆகியோர் அடங்கிய குழு நேற்று பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்களை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், யாழ் இந்திய துணைத் தூதுவர், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஆகியோர்

11

## பொலிஸ் அதிகாரம் வழங்கப்படின் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும்!

### உதய கம்மன்பில சபையில் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 10

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வட கிழக்கு மாகாணம் மீண்டும் இணையும் என்பதோடு, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் அபாயம் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக் கிழமை இடம் பெற்ற சபை

11



## பண்ணை கடலில் பெண்ணின் சடலம்!

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் மாநகருக்கு அண்மையாகவுள்ள பண்ணை கடலில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை இந்த சடலம் மீட்கப்பட்டது. சடலத்துக்கு உரியவர் இனங்காணப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## ஒற்றையாட்சியை குப்பையில் வீசுக!

### கஜேந்திரன் எம். பி.



கொழும்பு, பெப். 10

நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் இனப் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். அதனை ஒற்றையாட்சிக்குள் செய்ய முடியாது. ஒற்றையாட்சியை குப்பையில் போட்டு

11

## "நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளூராட்சி மன்ற தேர்தல்"

கொழும்பு, பெப். 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிச்சயமற்ற தன்மையிலேயே காணப்படுகிறது. சில அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரத்தை தொடங்கியுள்ள போதிலும், வேட்பாளர்கள் மந்தமாகவே காணப்படுகின்றனர். தேர்தல் குறித்த நிச்சயமற்ற தன்மைதான்

11

## ஹெரோயின் நுகர்ந்த 10 பேர் கைது!


யாழ்ப்பாணம் நகரில் ஹெரோயின் போதைப்பொருளை நுகர்ந்தபோது 10 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கூலித்தொழிலில் ஈடுபடும்

11

## தமிழரை அடிமைப்படுத்தவா பௌத்தம் போதிக்கின்றது?

### மகாநாயக்கர்களிடம் கேள்வி



கொழும்பு, பெப். 10

தம்மைத் தாமே நிர்வகிப்பதற்கான சுதந்திரத்தை வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு வழங்காமல் அவர்களை சிங்களவர்களின் காலடியிலேயே வைத்திருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள். இதனைத்தான் பௌத்தம் உங்களுக்குப் போதித்தா?

இவ்வாறு மகாநாயக்கர்களிடம் கேள்வி

11

## தொட்டிலை ஆட்டிவிட்டு ரணில் பிள்ளையையும் கிள்ளுகின்றார்!

### சபையில் சிறிதரன் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 10

"தீர்வை வழங்கப் போவதாக சர்வதேசத்துக்கு ஒரு முகத்தை காட்டும் ஜனாதிபதி ரணில், மறுபுறம் பௌத்த பிக்குகளையும் இனவாதிகளையும் தூண்டிவிடுகிறாார். அவரின் இந்த செயல் தொட்டிலையும் ஆட்டிவிட்டு, பிள்ளையையும் கிள்ளி விட்டு போன்று உள்ளது."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர்

11



உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023

தமிழ் தேசிய கூட்டமைப்பு

தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது…!

பதின்மூன்று என்ற இலக்கத்தை இராசியில்லாத இலக்கம் என்று முழு உலகமும் நம்புவது உண்மை என்றாகிவிடும் போலத் தெரிகின்றது.

ஆனால், அந்தப் பதின்மூன்றில் வெள்ளிக்கிழமை வந்தால் உலகம் எங்கும் உள்ள லொத்தர் சீட்டிழுப்புக்காரர்கள் அதிகூடிய பரிசுத் தொகையை அறிவித்து சீட்டிழுப்பை விற்பனை செய்வார்கள். அது ஏன் என்பது இன்றுவரை தெரியவில்லை. அந்த ஆராய்ச்சி நமக்கு தேவையில்லாததுதான்.

ஆனால், இந்தப் பதின்மூன்று நம்மை படுத்தும்பாடு கொஞ்சமல்ல. பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தப்போவதாக அண்மைக்காலமாக உரத்துக் குரல் கொடுத்துவந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திடீரென்று சுருதி மாறத் தொடங்கியிருக்கின்றார்.

பொலிஸ், காணி அதிகாரங்கள் உட்பட அரசியலமைப்பில் தற்போது இருக்கும் அதிகாரங்கள் அனைத்தையும் ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அமுல்படுத்துவேன். இல்லையெனில், யாரைவது பதின்மூன்றை இரத்துச் செய்கின்ற திருத்தத்தை அரசியலமைப்புக்கு கொண்டு வந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுங்கள் என்று சவால்விடும் பாணியில் சில வாரங்களுக்கு முன்னர் பேசிய ஜனாதிபதி, கடைசியாகப் பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையில் பொலிஸ் அதிகாரத்தைத் தவிர்த்து ஏனைய அனைத்தையும் அமுல்படுத்துவேன் என்றிருக்கின்றார்.

ஏன் இந்தத் திடீர் மாற்றம் என்பது வழக்கம்போல அவருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி.

அதைவிடக் கொடுமை, அவர் எக்கிய ராஜ்யத்திற்குள்ளேயே அதிகபட்ச அதிகார பரவல் என்றும் அறிவித்திருக்கின்றார். எக்கிய ராஜ்ய என்பது ஒற்றை யாட்சி என்பதே என்பதற்கு மறு விளக்கம் தேவையில்லை. ஆனால், அதனைத்தான் எக்கிய ராஜ்ய என்றால் அது ஒருமித்த அரசு என்று விளக்கம் எடுத்துக் கொண்டு நாம் காலத்தைக் கடத்தினோம்.

அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும் என்றும் அது நமது சட்டத்தில் இருக்கின்றபோது அதனை நிறைவேற்றாதுவிடுவது சட்டவிரோதமானது எனவும் ஜனாதிபதி அண்மையில் விளக்கமளித்திருந்தார்.

அதனை இப்போது நமது தரப்பிலும் சுட்டிக்காட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

ஆனால், மைத்திரிபால சிறிசேன, அரசியலமைப்புக்கு மாறாக மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தபோது - அதாவது ரணிலை பிரதமர் பதவியிலிருந்து தூக்கியபோது அதற்கு எதிராகப் பொங்கி எழுந்தவர்கள் நாங்கள்.

அரசியலமைப்பு சட்டத்தை ஒரு ஜனாதிபதி தன்னிச்சையாக மீறி நடக்க அனுமதித்தால் பின்னர் நமது பிரச்னைகளுக்கு அரசியலமைப்பு ரீதியாக தீர்வைக் கண்டாலும் ஜனாதிபதி ஒருவரால் அதனை மீறமுடியும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடும். அதனாலேயே நாங்கள் அரசியலமைப்பை ஒரு ஜனதிபதி மீறுகின்றபோது அதற்கு எதிராக நீதிமன்றை நாடியிருக்கின்றோம் என்று அப்போது விளக்கமும் சொல்லப்பட்டது.

அது நியாயமான விவாதம் தான். ஆனால், அப்போதே எமக்கு தீர்வாக (அது முழுமையான தீர்வாக இருக்காவிட்டாலும்) கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள விடயங்களை அமுல்படுத்துமாறு கேட்டு நீதிமன்றத்தை நாடாதது ஏன் என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

இப்போது, ரணில் விக்கிரமசிங்க சொல்லிக் காட்டிய பின்னர் நாமும் அதனை தூக்கிப்பிடிக்கத் தொடங்கி இருக்கின்றோமா?

கடந்த இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டபோது, இனப் பிரச்னைக்கு தீர்வாக சமஷ்டி கட்டமைப்பை உருவாக்க தான் தயாராக இருக்கிறார் என்று அறிவித்து தேர்தலை எதிர்கொண்டதையும் இப்போது சிலர் ஞாபகப்படுத்திக்கொண்டு, முன்னர் சமஷ்டியை தருவதாக சொன்னவர் இப்போது முடியாது என்பது ஏன் என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

அப்போது அவர் சமஷ்டி தருவதாக சொன்னது, இல்லையென்றால் புலிகள் தமிழீழத்தையே எடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தில் என்பது குழந்தைப் பிள்ளைகளுக்கும் தெரிந்த சங்கதி.

நாடு பிரிவதைத் தடுக்க சமஷ்டியை கொடுத்தாவது தடுப்போம் என்று நினைத்தவர், இப்பேது அப்படியொரு நிலை இல்லை என்றபோது அதனை இல்லை என்று சொல்வது புரிந்துகொள்ளக்கூடியதே. அதற்காக அப்போது சொன்னீர்கள் இப்போது தந்தால் என்ன என்று கேட்பது சரியானதுதானா என்பது தெரியவில்லை. அதிலும் கொடுமை, அப்போது அவர் சமஷ்டிக்காக தனக்கு வாக்களிக்க கேட்டபோது அதனை நிராகரித்தவர்களும் நாங்கள்தான்.

பதின்மூன்றாவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதிலிருந்த அதிகாரங்கள் பல பின்னர் பல்வேறு சட்டங்கள் ஊடாக பிடுங்கி எடுக்கப்பட்டன. உதாரணமாக மாகாண சபைகளின் கீழிருந்த மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்லப்பட்டனர்.

திவிநெகும மூலம் மாகணத்தின் அதிகாரங்கள் எடுக்கப்பட்டன. இவற்றை எல்லாம் மீண்டும் மாகாண சபைகளுக்கு கீழ் கொண்டுவந்தால் மாத்திரமே பதின்மூன்று முழுமையாக அமுல்படுத்தப்படும்.

தெற்கில் பதின்மூன்றுக்கு எதிராகப் பிக்குமாரும் சிங்கள அடிப்படைவாதிகளும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்க, நாங்கள் சமஷ்டிக்கு குறைந்த எதனையும் ஏற்கமாட்டோம் என்று கூறிக்கொண்டிருந்தால் ரணிலின் வேலை இலகுவாகி விடும்.

இதனால் நமக்கு எதுவும் மிஞ்சப்போவதில்லை.!

**- ஊர்க்குருவி**

# அமைச்சரை வரவேற்க சென்ற மாணவர்களை வெயிலில் நிறுத்திய விமான நிலைய அதிகாரிகள்!

## பொறுப்புடன் செயல்பட்ட ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன்



யாழ்ப்பாணம், பெப். 10

இந்திய அமைச்சரை வரவேற்பதற்கு அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்களை விமான நிலையத்துக்குள் பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதிக்காமல் வெயிலில் நீண்ட நேரம் நிறுத்தி வைத்திருந்தமைக்கு அரச அதிகாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். எனினும், இது விடயத்தில் பொறுப்புணர்ந்து செயல்பட்ட ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவன் மாணவர்களை விமான நிலையத்துக்குள் நுழைய நடவடிக்கை எடுத்தார்.

நேற்று பலாலி விமான நிலையத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

இந்தியாவின் கடற்றொழில் இணை அமைச்சர் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரை வரவேற்பதற்கு பலாலி விமான நிலையத்துக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் அழைத்து செல்லப்பட்டனர்.

ஆனால், அமைச்சரின் வருகை சுமார் மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாக தாமதமான நிலையில், விமான நிலைய பாதுகாப்பு பிரிவினர் மாணவர்களை நீண்ட நேரமாக வெயிலில் காத்திருக்க வைத்தனர்.

மாணவர்களை உள்ளே அனுமதிக்குமாறு அரச அதிகாரிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு கூறியபோதும் அவர்கள் மேலிடத்து உத்தரவின்படி அவர்களை அனுமதிக்க முடியாது என்று மறுத்து விட்டனர்.

பின்னர், அங்கு வந்த, ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவன் வெயிலில் நின்ற மாணவர்களை உள்ளே அழைக்குமாறு கூறினார். இதைத் தொடர்ந்து அதிகாரிகளுக்கும் அவருக்கும் தர்க்கம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, பொறுப்பை தான் ஏற்பதாகவும் மாணவர்களை உள்ளே அனுமதிக்குமாறும் கூறினார். இதன் பின்னரே, அதிகாரிகள் மாணவர்களை உள்ளே அனுமதித்தனர்.

விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளின் நடத்தைக்கு பல தரப்பினரும் கண்டனம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

(ஐ-03)

# ஜனாதிபதி யாழ். வருகை ஏற்பாடு தொடர்பில் ஆய்வு

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் இந்திய அரசாங்கத்தால் நாளை சனிக்கிழமை இலங்கை அரசாங்கத்துக்கு கையளிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வை முன்னிட்டு கலாசார நிலையத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக நேற்று ஆராயப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் ஆனல்ட் மற்றும் அதிகாரிகள் பங்கேற்ற இந்த களஆய்வில், ஜனாதிபதி வருகை உள்ளிட்ட அரங்கேற்ற நிகழ்வுகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன. (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் கியூ. ஆர். அறிமுகம்!

கொழும்பு, பெப். 10

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கியூ. ஆர். குறியீட்டை தேர்தல் ஆணைக்குழு அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்த கியூ. ஆர். குறியீடு மூலம், இந்த ஆண்டு தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் பட்டியல் பட்டியலை பார்வையிடமுடியும்.

உள்ளாட்சி தேர்தல் அடுத்த மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

படத்திலுள்ள கியூ. ஆர். குறியீட்டை பயன்படுத்தி மேலதிக விவரங்களை அறிய முடியும். (ஐ)

# சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், பெப். 10

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலை வர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப் புலவர் க. கயிலைநாதன் "அன்பே சிவம்" என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

புத்தூர் மேற்கு கலைமதி ஆலடி முருகன் ஆலய மகா கும்பிஷேக பெருவிழாவை முன்னிட்டு தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 10 தினங்கள் மாலை 6.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங் கமைப்பில் இந்தத் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

இன்றைய தினம் இளம் சைவப்புலவர் ச. நவநீதன் "விநாயகர் திருவுருவம் உணர்த்தும் தத்துவம்" என்ற தலைப்பில் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
10.02.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பொலிஸ் அதிகாரம்?

13ஆவது திருத்தச் சட்டம் மீளவும் தென்னிலங்கையின் அரசியல் களத்தை சூடாக்கியிருக்கின்றது. மக்களின் பிரச்னைகளுக்கு வழி சொல்ல முடியாத அரசியல்வாதிகள் பலர் தங்களை வீரர்களாக காண்பிப்பதற்காக 13 எதிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான கூச்சல்கள் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், இவ்வாறான சத்தங்களையும் தாண்டித்தான் விடயங்களை முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது. அதற்குத்தான் அரசியல் தற்துணிவு அவசியம். அந்தத் துணிவு ரணிலிடம் இருந்தால் விடயங்களை முன்னெடுக்க முடியும்.

13 எதிர்ப்பில் ஈடுபடுவோர் முன்வைக்கும் பிரதான அச்சம் பொலிஸ் அதிகாரம் தொடர்பானது. 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால், இரத்த ஆறு ஓடும் என்றவாறான அச்சம் ஏற்படுத்தப்படுகின்றது. 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படாமலிருந்த காலத்தில் இந்த நாடு அமைதியாகவா இருந்தது? சிங்கள மக்களின் பிரச்னையே, அவர்கள் மத்தியில் உண்மைகளை உரத்துக் கூறக்கூடிய செல்வாக்குமிக்க தலைவர்கள் இல்லை. இருப்பவர்கள் அனைவருமே எப்படியாவது அதிகாரத்துக்கு வரவேண்டும் என்றே நினைக்கின்றனர். இதுதான், இலங்கை சுதந்திரமடைந்ததாக கூறப்பட்ட காலத்திலிருந்து இடம்பெற்று வரும் விடயமாகும். உண்மைகளை கூறி, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான அரசியலைக் கையிலெடுப்பதற்கு எவருமில்லை. தென்னிலங்கையின் இவ்வாறான கற்கால அரசியலே தமிழ் சூழலில் யதார்த்தமாக சிந்திப்பவர்களையும் கேள்விக்கு உள்ளாக்கின்றது.

13ஆவது திருத்தச்சட்டம் இன்றுவரையில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. இதிலுள்ள இரண்டு பிரதான விடயங்களை தென்னிலங்கையின் சிங்கள கடும்போக்குவாதிகளும் மகாசங்கத்தினரும் சிக்கலுக்கு உரியவையாக நோக்குகின்றனர். இதில் பிரதானமானது பொலிஸ் அதிகாரம். பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் மீளவும் தமிழர்களின் கைகளுக்கு ஆயுதம் சென்றுவிடுமென்று ஒரு தரப்பு அச்சத்தைப் பரப்புகின்றது. இன்னொரு தரப்போ பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் பொலிஸ் நிர்வாகம் அதிகம் அரசியல் மயப்படுத்தப்படும் என்னும் வாதத்தை முன்வைக்கின்றது. மொத்தத்தில் 13 தொடர்பில் ஒரு வகையான அச்சமே விதைக்கப்படுகின்றது.

பொலிஸ் என்பது அடிப்படையில் ஓர் அடையாளமே அன்றி ஆயுதமல்ல. தவிர, மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் பொலிஸ் அதிகாரம் மத்தியின் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கப் போகின்றது. இது உலகின் பல நாடுகளிலும் இருக்கின்ற முறைமைதான். உதாரணமாக இந்தியாவில் மாநிலத்துக்கு பொலிஸ் அதிகாரம் உண்டு. அதனால் அங்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை. மாறாக நன்மைதான் ஏற்படுகின்றது. ஆனால், எல்லாவற்றையுமே கறுப்பு வெள்ளையாகப் பார்க்கும் சிங்கள அடிப்படைவாதம் அச்சங்களை விதைப்பதிலேயே குறியாக இருக்கின்றது.

அதிகாரங்களை வழங்க மறுப்பதுதான் நாட்டை பின்நோக்கித் தள்ளுகின்றது. இதனை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைப்பதற்கு உரியவர்கள் இல்லை. நாட்டில் அரசியல் மாற்றம் – அதாவது, கட்டமைப்பு மாற்றம் (சிஸ்டம் சேஞ்) வேணடுமென்று வாதிடுகின்ற 'அறகலய' தரப்பினரும் இவ்வாறான உண்மைகளை சிங்கள மக்களிடம் கொண்டுசேர்க்க முயற்சிப்பதில்லை. சிஸ்டம் சேஞ் வேண்டும் என்று எவர் வேண்டுமானாலும் கோரலாம். ஆனால், அதனை எவ்வாறு அடைவது? அடிப்படைவாத சக்திகளை சிங்கள மக்கள் மத்தியில் தோற்கடிக்காமல் எவ்வாறு முன்னோக்கி செல்வது?

இன்று 13இற்கு எதிராக சிங்கள அடிப்படைவாதிகளும் பிக்கு அமைப்புக்களும் வீதியில் நிற்கின்ற போது சிஸ்டம் சேஞ் கோரிய அறகலய குழுவினர், மனித உரிமைவாதிகள், குமார் குணரட்ணம் போன்ற புரட்சி பேசும் குழுவினர் ஏன் மௌனமாக இருக்கின்றனர்? அரசியலமைப்பில் உள்ளதை அமுல்படுத்தட்டும் - அதிலென்ன பிரச்னை என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்? இந்த விடயத்தை 'அறகலய' பக்கமுள்ள தமிழ் சிவில் சமூக குழுக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். முடிந்தால் இவற்றை அவர்களுக்கு உணர்த்த முயற்சிக்க வேண்டும்.

# பல்கலைக்கழக மாணவர் போராட்டத்தில் சுயநலனுக்காகவே மதகுருக்கள் பங்கேற்பு

## மறவன்புலவு சச்சிதானந்தன் சாடல்

*யாழ்ப்பாணம், பெப். 10*

"பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் சுயநலமற்ற பதவி நோக்காத - புகழ் நோக்காத - தூய்மையான போராட்டம். இதில், பதவிக்காக - புகழுக்காக ஆங்கிலத் திணிப்புக்காகக் கத்தும் குரலில் கடத்திய பாதிரிகளும் பாதிரிகளின் அடிவருடிச் சாமியும் போக்கற்றவர்கள் புறத்தவர்கள் உணர்வாளர்கள் அல்ல - கொள்கையாளர்கள் அல்ல."

- இவ்வாறு கூறியிருக்கிறார் ஈழம் சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கை அப்படியே வருமாறு,

பாலர் பருவம் - பாசம் பாலில் பருகும் பருவம், மழலைப் பருவம் -அன்பைக் குரலில் கொழிக்கும் பருவம், சிறுவர் பருவம் - சுற்றிப் பார்த்து வியக்கும் பருவம், வளர் இளம் பருவம் - வினவும் பருவம் - துருவும் பருவம், விடலைப் பருவம் - துடுக்கும் துணிவும் பழகும் பருவம், காளைப் பருவம் - கருத்தும் கொள்கையும் காதலுமான பருவம்.

பல்கலைக்கழக மாணவர் காளைப் பருவத்தினர். தகவல் திரட்டினர் - தொகுத்தனர் - ஆய்ந்தனர். கருத்துருவாக் கினர் - கொள்கை வகுத்தனர்

போர்த்துக்கேயர் போயினர் - ஒல்லாந்தர் போயினர் - ஆங்கிலேயர் போயினர் - சிங்களவர் போகவில்லை. அடிமைகளே நாங்கள். பல்கலைக்கழக மாணவரின் கொள்கை வகுப்பு. அடிமை வாழ்வுக்கு அடையாள நாள் பெப்ரவரி 4. அதையொட்டிப் பேரணி நடத்துவோம் அடிமைத் தளை அறுப்போம் என உறுதி பூண்டனர். வடக்கிலிருந்து கிழக்குக்கு தடுக்கும் தடைகளை மீறிப் பேரணி. பல்கலைக்கழக மாணவர் பேரணி. தமிழர் விடிவுக்குப் பேரணி.

தமிழ் அல்லாத N2E புகுந்தது முன்பு தமிழ் அல்லாத P2P புகுந்தது போல். , சிங்களம் புகக்கூடாது போராட்டத்தில் ஆங்கிலம் புகுந்தது. புகுத்தியவர் பறங்கியர் சிங்களவருக்கு முன்பே அடிமை கொண்டவர்.

தொப்பியில் N2E, P2P, தலைப்பட்டியில் N2E, P2P சட்டை மார்பில் N2E, P2P கைத் தட்டியில் N2E, P2P பறக்கும் கொடியில் N2E, P2P தமிழ் இல்லை. ஆங்கிலம் புகுத்தியவர் சிங்களவர் அல்ல. தமிழைப் புறக்கணியுங்கள் தமிழ் மூடநம்பிக்கையின் மொழி என 400 ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் தமிழருக்கு மூளைச் சலவையிடும் பறங்கி வழி வந்தவர்.

பல்கலைக்கழக மாணவர் பேரணி அன்றோ. மாணவர் முன்னிலை வகிக்கும் பேரணி அன்றோ. பாதிரி எங்கே ஏன் வந்தான்? பாதிரியின் அடிவருடிச் சாமி எங்கே ஏன் வந்தான்? பாதிரி பல்கலைக்கழக மாணவனா? பாதிரியின் அடிவருடிச் சாமி பல்கலைக்கழக மாணவனா? பாதிரிக்கும் சாமிக்கும் பல்க லைக்கழக மாணவர் இடம் கொடுத்தனரா? அல்லது அடம்பிடித்து இவர்களே முன்னணி இடத்தை எடுத்துக் கொண்டனரா?

பொத்துவில் - பொலிகண்டி பேரணியில் 20 பாதிரிகள் வரிசையாக முன்னணியில். நடுவிலே பாதிரிகளின் அடிவருடிச்சாமி.

நல்லூர் கோயிலுக்கு வழிபடப் போனால் வழிமறிப்பேன் என்று சொன்ன... நல்லூர் கோயிலை சாத்தானின் கோயில் என்று சொல்கின்ற... அங்கே வழிபடப் போகாதீர்கள் என்று சொல்கின்ற... பாதிரியின் அடிவருடிச் சாமி.

வானூர்தியைக் கத்திமுனையில் கடத்திச் செல்லும் பயங்கரவாதிகளுக்கும் பல்கலைக் கழக மாணவர்களின் பேரணியைக் கத்தும் குரலில் கடத்திச் செல்லும் பாதிரிகளுக்கும் பாதிரிகளின் அடிவருடிச் சாமிகளுக்கும் வேறுபாடு இல்லை.

பல்கலைக்கழக மாணவர் மூட்டும் தீயில் தாமாகத் தீ மூட்ட வக்கில்லாது குளிர் காய்ந்த சுயநலமிகளான பாதிரிகளையும் பாதிரிகளின் அடிவருடிச் சாமிகளையும் பொது வெளியில் இருந்து அகற்றப் பல்கலைக்கழக மாணவர்கள் உறுதி பூணுவார்களாக.

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் சுயநலமற்ற பதவி நோக்காத - புகழ் நோக்காத - தூய்மையான போராட்டம். தகவலில் - தொகுப்பில் - ஆய்வில் - கருத்துருவாக்கத்தில் - கொள்கைப் பிடிப்பில் நடத்திய போராட்டம்.

பதவிக்காக - புகழுக்காக ஆங்கிலத் திணிப்புக்காகக் கத்தும் குரலில் கடத்திய பாதிரிகளும் பாதிரிகளின் அடிவருடிச் சாமியும் போக்கற்றவர்கள் புறத்தவர்கள் உணர்வாளர்கள் அல்ல - கொள்கையாளர்கள் அல்ல. (ஐ)

# யாழ். கம்பன் விழா இன்று ஆரம்பம்!

*யாழ்ப்பாணம், பெப். 10*


அகில இலங்கை கம்பன் கழகம் நடத் தும் யாழ். கம் பன் விழா இன்று வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் ஆரம்பமாகி றது.

ஆசியுரைகளை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட்பணி ம. ஜெறோ செல்வநாயகம், அஷ்ஷெய்க் மௌலவி எம். ஏ. பைசர், பொகவந்தலாவை இராகுலதேரர் ஆகியோர் வழங்குவர்.

தலைமை உரையை யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஆற்றுவார். தொடக்கவுரையை வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஆற்றுவார்.

தொடர்ந்து 'இலக்கிய ஆணைக்குழு' கூடும். இதற்கு நடுவராக முனைவர் இரா. மாது (தமிழ்நாடு) விளங்கு வார். 'அறிவைக் கடந்த உணர்வுச் செயல்பாட்டால் வாசகர் மனதில் பெரிதும் உயர்ந்து நிற்பவன்' 'பரதனே' என்று இரா. செல்வ வடிவேல், 'குகனே' என்று தி. வேல்நம்பி, 'வாலியே' என்று ந. விஜயசுந்தரம், 'கும்பகர்ணன்' என்று சிறீ. பிரசாந்தன் ஆகியோர் வாதிடுவர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 10 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - தை 27
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி




**மேடம்**
செயலில் இருந்த தடை விலகும். செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற வருமானம் வரும். முயற்சிகள் ஆதாயமாகும். உங்கள் சுய ஆற்றல் வெளிப்படும். எதிரிகள் பின் வாங்குவர்.

**இடபம்**
வியாபாரத்தில் இருந்த தடை விலகும். செயல்களில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். பணியிடத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். உங்கள் அறிவாற்றல் வெளிப்படும்.

**மிதுனம்**
அரசு வழியிலான முயற்சியில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். வழக்கு விவகாரம் சாதகமாகும். பொருளாதார நெருக்கடி விலகும். தாய்வழி உறவுகளால் நன்மை அதிகரிக்கும்.

**கடகம்**
எதிர்பார்த்த அளவிற்கு வரவு வந்து சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்னை முடிவிற்கு வரும். அலுவலகத்தில் உயர் அதிகாரியின் ஆதரவு உண்டாகும்.

**சிம்மம்**
உங்கள் முயற்சி நிறைவேறும். விஜபிகள் ஆதரவால் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பணியாளர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும். மனதில் பல்வேறு குழப்பம் உண்டாகும்.

**கன்னி**
வேலையில் இருந்த இழுபறி நிலை முடிவிற்கு வரும்.மனம் மகிழும்படியான சூழல் உருவாகும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்பிற்குரிய செய்தி வரும்.

**துலாம்**
பொருள்களைக் கையாள்வதில் கவனம் தேவை. உங்கள் பேச்சின் வழியே நன்மை தோன்றும். பொருளாதார நிலை உயரும். பழைய கடன்களை அடைத்து நிம்மதி காண்பீர்கள்.

**விருட்சிகம்**
வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் சாதகமான நிலை உண்டாகும்.நீங்கள் மேற்கொண்ட முயற்சி இழுபறியாகும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்த்தவற்றில் லாபமான நிலையை காண்பீர்கள்.

**தனுசு**
வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு நல்ல செய்தி வரும். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். உங்கள் ஆற்றல் வெளிப்படும். முயற்சியில் இருந்த தடைகள் விலகி நினைத்ததை அடை வீர்கள்.

**மகரம்**
நெருக்கடி விலகும். ஆர்வத்துடன் எதிர்பார்த்த ஒன்று ஆதாயமாகும். நிதிநிலை உயரும். இரண்டு நாளாக இருந்த சங்கடம் விலகும். உங்கள் செயல்களில் வேகம் உண்டாகும்.

**கும்பம்**
உங்கள் மன நிலையை பாதிக்கும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறும். தேவையற்ற சங்கடங்கள் தோன்றி உங்களை சோர்வடைய வைக்கும். பயணத்தில் கவனம் தேவை.

**மீனம்**
குழப்பம் நீங்கி உற்சாகமாக செயல்படுவீர்கள். எதிர்பாலினரால் ஆதாயம் உண்டாகும். பணியிடத்தில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மைகள் ஏற்படும்.

# மதுரையில் 2,200 வருடங்களுக்கு முந்தைய தமிழி கல்வெட்டு மீட்பு



மதுரை, பெப். 10

மதுரை - திருப்பரங்குன்றம் மலைக் குகையில் சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான தமிழி கல் வெட்டு கண்டுபிடிக்கப்பட்டமை தொல்லியல் ஆர்வலர்களை ஆச்சரியப்படுத்தி உள்ளது.

திருப்பரங்குன்றம் ரயில் நிலையம் எதிரிலுள்ள குன்றின் மேற்குசரிவில் உள்ள 2 குகைகளில் கற்படுக்கைகளும், கி. மு. 1 மற்றும் கி.பி.1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 3 தமிழி கல்வெட்டுகளும் மத்திய தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படுகின்றன.

இதனிடையே மேலேயுள்ள குகைக்குச் செல்லும் வழியில், அதன் இடதுபுறம் ஒரு சிறிய குகை உள்ளது. இதனுள்ளே 5 கற்படுக்கைகள் உள்ளன. இதில் விதானத்தின் மேற்குப் பகுதியில் ஒரு தமிழி கல்வெட்டை தொல்லியல் ஆய்வாளர் வெ. பாலமுரளி கண்டறிந்தார்.

பின்னர் தொல்லியல் ஆய்வு நிறுவனத் தலைவர் வே. ராஜகுரு, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மைய ஆய்வாளர் உதயகுமார் ஆகியோர் அந்த கல்வெட்டை படியெடுத்து, தொல்லியலாளர் சாந்தலிங்கம் துணையுடன் படித்ததில், அது சுமார் 2,200 ஆண்டுகள் பழமையான தமிழி கல்வெட்டு எனத் தெரியவந்தது.

இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் வே.ராஜகுரு, வெ.பாலமுரளி ஆகியோர் கூறியதாவது:

இக்குகையிலுள்ள கல்வெட்டில் 2 வரிகள் உள்ளன. முதல் வரியில் 'த, ர' தவிர மற்ற எழுத்துகள் சிதைந்துள்ளன. 2ஆம் வரியிலும் சில எழுத்துகள் அழிந்துள்ளன. சில எழுத்துகள் இடைவெளி விட்டு எழுதப்பட்டுள்ளன. முதல் வரியின் தொடர்ச்சியாக அமைந்த இரண்டாம் வரியில் உள்ள எழுத்துகளை "யாரஅதிறஈத்த வதர" என படிக்கலாம்.

குகையிலுள்ள 5 கற்படுக்கைகளை குறிக்க 5 கோடுகள் வெட்டப்பட்டுள்ளன. இக்கற்படுக்கைகளை அமைத்து கொடுத்தவர் பெயராக 'யாரஅதிற' எனக் கொள்ளலாம். அதிட்டானம் என்றால் இருக்கை என்ற பொருளும் உண்டு. எனவே இக்கல்வெட்டு கி. மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதலாம்.

இக்கல்வெட்டை மத்திய, மாநில தொல்லியல் துறை ஆய்வு செய்து முழு தகவலையும் வெளிக் கொண்டு வந்தால் மதுரை அருகே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த முதுகுடிகள் பற்றிய புதிய தகவல்கள் கிடைக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினர். (ஐ)

# 2023இற்குள் சகல திட்டங்களும் செயல்வடிவம் பெற வேண்டும்!

## முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு



சென்னை, பெப். 10

2023ஆம் ஆண்டுக்குள் அனைத்துத் சிறப்பு திட்டங் களும் செயல்பாட்டுக்கு வர வேண்டும் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

தலைமை செயலகத்தில் அவர் நேற்று நத்திய ஆய்வுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

மேலும், அரசு என்பது முதல்வர் மட்டுமல்ல, அமைச்சர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் இணைந்ததே. இம்மூன்று பகுதிகளும் ஒன்றாக இணைந்து ஒருமுகப்பட்டுச் செயல்படுவதே நல்லாட்சியாக அமைந்திட முடியும். அத்தகைய நல்லாட்சியை நாம் நடத்தி வருகிறோம் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

மதுரையில் கருணாநிதி பெயரால் நூலகம் அமையும் என்று அறிவித்தோம். மளமளவென எழுந்து வருகிறது திறக்கப்படக்கூடிய நிலைக்கு வந்து விட்டது. சென்னையில் மிகப்பெரிய மருத்துவமனை கிண்டியில் அமையும் என்று சொன்னோம், அதுவும் வேக வேகமாகக் கட்டப்பட்டு வருகிறது. இப்படி ஒவ்வொரு திட்டத்தையும், அறிவிப்பையும் உங்கள் கண்ணுக்கு முன்னால் கொண்டு வந்து எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை ஆய்வு செய்யுங்கள். இருபது மாதம் கடந்துவிட்டது.

திட்டங்களைச் செயல்படுத்துதல், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் தடைகள் ஏற்படலாம். எனவே, முன்கூட்டியே 2023ம் ஆண்டுக்குள் அனைத்துத் திட்டங்களும் செயல்பாட்டுக்கு வந்துவிட்டன என்ற நிலையை எட்டியாக வேண்டும் - என்றார்.

# இலங்கையிலிருந்து கடத்தப்பட்டபோது கடலில் வீசப்பட்ட 12 கிலோ தங்கம் மீட்பு

இராமேஸ்வரம், பெப். 10

இராமேஸ்வரத்தில் கடலில் வீசப்பட்ட 12 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து தனுஷ்கோடி இராமேஸ்வரத்துக்கு அகதிகளாக மக்கள் அவ்வப்போது வருகிறார்கள். அதே நேரத்தில் இராமநாதபுரம் கடல் வழியாக இலங்கைக்கும் - இலங்கையில் இருந்து இராமநாதபுரம் மாவட்டத்துக்கும் கடல் வழி கடத்தல் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், தனுஷ்கோடி கடல் பகுதி வழியாக மண்டபத்துக்கு படகில் தங்கக்கட்டிகள் கடத்தி வரப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வு பிரிவுக்கு இரகசிய தகவல் வந்துள்ளது. இதை தொடர்ந்து இந்திய கடலோர காவல் படையினர் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்திய கடலோர காவல் படையை கண்டதும், படகு ஒன்றில் இருந்தவர்கள், திடீரென சில பொருட்களை கடலில் தூக்கி வீசினர் என்று கூறப்படுகின்றது. இதையடுத்து கடலோர காவல் படையினர் விரைந்து சென்று அந்த படகை மடக்கி பிடித்தனர். அதில் இருந்த 3 பேரையும் பிடித்து விசாரித்தனர்.

கடலோர காவல் படையினர் நடத்திய தேடுதலில் கடலில் வீசப்பட்ட தங்கக் கட்டிகள் அடங்கிய மூடை மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்ட மூடையில் 12 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது. இதன் மதிப்பு 7.5 கோடி இந்திய ரூபாய் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ச்சியாக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. (ஐ)

# ஆட்சி மாறினாலே நாட்டில் நெருக்கடி காட்சிகள் மாறும்

## கூறுகிறது சஜித் அணி



**கொழும்பு, பெப். 10**
**நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு ஆட்சி மாற்றமே ஒரே வழி என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை மூன்று அடிப்படை யில் பார்க்க வேண்டும். ஒன்று அரசுக்கு எதி ரான சர்வஜன வாக்கெடுப்பு. அப்படி இந்தத் தேர்தலைப் பார்த்தல் 90 வீதமான மக்கள் அரசுக்கு எதிராக வாக்களிப்பர்.

இரண்டாவது இந்தத் தேர்தல் முடிவின் அடிப்படையில் அரசு கலைய வேண்டும்.

அதன் பின் அதிகாரத்தில் இருப்பதற் கான தகுதியை அரசு இழக்கும். பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மூன்றாவது அடுத்து ஆட்சியை யாரிடம் ஒப்படைப்பது என்ற முடிவை மக்கள் எடுக்கும் தேர்தலாக இது அமைய வேண்டும். இந்தத் தேர்தலின் பின் ஆட்சி மாற்றம் இடம்பெற வேண்டும். அந்த ஆட்சி மாற்றம் ஊடாகப் பொருளாதார மாற்றம் இடம் பெறும். புதிய அரசுக்கு சர்வ தேச நாடுகள் உதவும் - என்றார். (அ)

# கடலட்டை, சுறா சிறகுடன் இருவர் கற்பிட்டியில் கைது

கொழும்பு, பெப். 10
கடலட்டைகள் மற்றும் சுறா சிறகுகள் கடத்திச் செல்லப்படுவதாக கற்பிட்டி விஜய கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று அதிகாலை சேரக்குளிப் பகுதியில் வைத்து சந்தேகத்திற்கிடமான இரண்டு லொறிகளை கடற்படையினர் மறைத்துச் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது லொறிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கடலட்டைகள் மற்றும் சுறா இறகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் 41 வயதுடைய எலுவாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் 49 வயதுடைய புத்தளத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடமிருந்து 4 உரைப்பைகளில் 239 கிலோ கிராம் கடலட்டைகளும் 19 உரைப்பைகளில் 921 கிலோ கிராம் எடையுடைய சுறா சிறகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களையும் கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் மற்றும் சுறா சிறகுகளையும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு லொறிகளையும் சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி விஜய கடற்படையினர் தெரிவித்தனர். (அ)

# சித்திரை புத்தாண்டு காலத்தில் பொருட்களின் விலை குறைப்பு!

கொழும்பு, பெப். 10
தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதிக்குள் பொருட்களின் விலைகளை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தற்போதைய நெருக்கடியான நிலையில் மக்களின் வருமான அளவை விட பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையினால் பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்குள் பொருட்களின் விலைகள் குறைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.

மேலும்,பண்டிகைக் காலத்துக்கு தேவையான முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அனுமதி நிலுவையில் உள்ளது-என்றார். (அ)

# யாழில் ஹெரோயினுடன் இரு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப். 10
நெல்லியடி - இமையாணன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில், ஹெரோயின் போதைப் பொருளுடன் இரு இளைஞர்கள் நெல்லியடி பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேசங்களைச் சேர்ந்த 24, 27 வயதான இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் 63 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 10
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 647 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, ஜனவரி மாதத்தில் 6 ஆயிரத்து 497 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 150 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில், கொழும்பு மாவட்டத்தில் 218 டெங்கு நோயாளர்களும், புத்தளத்தில் 172 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 130 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# பொலிஸ் வேடத்தில் காரில் பயணித்த 6 பேர் சிக்கினர்!

கொழும்பு, பெப். 10
பொலிஸ் விளையாட்டுச் சீருடை அணிந்து காரில் பயணித்த ஆறு சந்தேக நபர்கள் நிட்டம்புவ மாஇம்புல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் கைவிலங்கு ஒன்று இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு நிட்டம்புவ மாஇம்புல பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது விளையாட்டு உடை அணிந்து காரில் பயணித்த சந்தேகத் திற்குரிய நான்கு பேரை சோதனையிட்டபோது அவர்கள் போலி பொலிஸார் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்கள் சில குற்றச் செயல்களுக்காக பொலிஸ் சீருடையில் வந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 27-30 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# சுதந்திர தினத்தன்று கழிவறைக்கு மட்டும் ஒரு கோடி 67 இலட்சம் ரூபா செலவாகியது!

கொழும்பு, பெப். 10
சுதந்திர கொண்டாட்டத்தின் இரண்டு மணி நேரம் கழிவறைக்கு மட்டும் ஒரு கோடியே அறு பத்தேழு இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் வசந்த சமரசிங்க தெரி வித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கஹடகஸ்திகிலிய - மஹா வெவ பிரிவு அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியி டும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரணில் - ராஜபக்ஷவின் கடைசி சுதந்திரக் கொண்டாட்டம் இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது என வும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் பணம் இல்லை என சொன்ன ரணில் தேசிய சுதந்திர தின நிகழ்வுக்காக செலவு செய்தார். ரணிலின் மனச்சாட்சி நன்கு தெரியும், தான் சொல்வது தவறு என்று. எனவும் அவர் கூறினார். (அ)

# டயானாவைக் கைது செய்ய பிடியாணை தேவையில்லை

கொழும்பு, பெப். 10
இராஜாங்க அமைச்சர் டயானா கமகே குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றமிழைத்திருந்தால், அவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த பிடியாணை தேவையில்லை என கொழும்பு பிரதான நீதவான் தெரிவித்துள்ளார்.

டயானா கமகேவின் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த நீதவான் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணையின் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கையொன்றை நீதிமன்றில் சமர்ப்பித்தனர். (அ)

# கினிகத்தேனையில் தாய், மகள் மர்மமான முறையில் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 10
கினிகத்தேனை பிரதேசத்தில் வீடொன்றில் தாயும் மகளும் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

கினிகத்தேனை பெரகஹ மூல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய மஹமதிலகே பிரதீபா இந்திராணி என்ற பெண்ணும் 30 வயதுடைய அவரது மகளும் உயிரிழந்துள்ளனர்.

பல நாட்களாக வீட்டில் வசித்தவர்கள் வெளியே வராத நிலையில், வீட்டின் திசையிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக குடியிருப்பாளர்களுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கினிகத்தேனை பொலிஸ் நேற்று வீட்டை சோதனையிட்டனர்.

இதன்போது படுக்கையறையில் இருவரின் உடல்களையும் பொலிஸார் மீட்டனர்.

உயிரிழந்த இருவரும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் எனவும், உயிரிழந்த பெண்ணின் கணவர் மற்றும் மகன் கொழும்பில் பணிபுரிந்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# யானை, மொட்டுக் கூட்டணிகளை கண்டிப்பாக தோற்கடிக்கவேண்டும்

## அடித்துக் கூறுகின்றார் சஜித் பிரேமதாஸ




கொழும்பு, பெப். 10

**மக்கள் மீதான தொடர்ச்சியான சுமைகளுக்கு எதிராகவே பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் அக்கிராசன உரையை நாம் புறக்கணித்தோம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கேகாலையில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை அழித்து நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்சர்களைப் பாதுகாக்கும் யானை மற்றும் மொட்டு கூட்டணியைக் கண்டிப்பாகத் தோற்கடிக்க வேண்டும்.

இதேவேளை, பணம் செலவிட்டு சமூக ஊடகங்களில் போலியான அலைகளை உருவாக்கி மக்களை ஏமாற்ற மற்றுமொரு குழுவினர் செயற்பட்டு வருகின்றனர்.

அவர்கள் குறித்தும் மக்கள் கவனம் செலுத்தி குறித்த அலைகளுக்கு மக்கள் ஏமாறாமல் இருக்கவேண்டும்.

மக்கள் மீதான தொடர்ச்சியான சுமைகளுக்கு எதிராகவே பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் அக்கிராசன உரையை நாம் புறக்கணித்தோம்.

மக்கள் வாழ்வை அழிக்கும் அக்கிராசன உரைகளுக்கு ஏமாறாமல் மக்களின் வாழ்வை அழிக்கும் இந்த ஆட்சிக்கு எதிராக விரைவில் மக்கள் அலையுடன் கொழும்பு வரவுள்ளோம்.

இந்நாட்டு மக்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம், வரிக்கு மேல் வரி விதிக்க வேண்டாம், மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என்று யானை மற்றும் மொட்டு அரசாங்கத்திடம் கூறிக்கொள்கின்றோம்.

யானை மற்றும் மொட்டு அரசை விரட்ட அனைவரும் ஒன்றிணைய வேண் டும். இந்நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்ச குடும்பத்துக்கு எந்தப் பிரச் னையும் இல்லை.

ஆனால், ராஜபக்ஷக்களின் அடிமைகளாக மாறிய 220 இலட்சம் மக்க ளும் நிர்க்கதியாகியுள்ளனர்.

இதுபோன்ற தருணத்தில், மக்கள் மீண்டும் கடந்த 2019ஆம் ஆண்டைப் போல் போலிகளுக்கு ஏமாற வேண்டாம். சமூக ஊடகங்கள் மூலம் செயற்கையாக உருவாக்கப்படும் சமூக ஊடக அலைகளுக்கு ஏமாற வேண்டாம்.

இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் வாழவைக்கும் புது யுகத்துக்கான ஆணையை வழங்குமாறு மக்களிடம் கோருகின்றோம்.

நாட்டின் அவதானத்தைத் திசை திருப்பி மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்தாதிருக்க அரச தரப்பினர் முயற்சிக்கின்றனர் என்பதால், அக்கிராசன உரையையோ, பாராளுமன்ற விவாதங்களையோ பற்றி சிந்திக்காமல் ஐக்கிய மக்கள் சக்தி, மக்களின் வாக்குரிமைக்காக முன்நின்று மார்ச் 9ஆம் திகதிக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது - என்றார்.

(அ)

# துருக்கி தூதரகத்துக்கு சென்று மகிந்த அனுதாபம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10

இலங்கையில் உள்ள துருக்கி தூதரகத்துக்கு நேற்று வியாழக் கிழமை காலை சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துருக்கியில் ஏற்பட்ட நில நடுக் கத்தால் நேர்ந்த உயிரிழப்புகளுக்காக அனுதாபம் தெரிவித்துள்ளார்.



துருக்கியில் இடம்பெற்ற பூகம்பத்தையடுத்து அங்கு 15000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அங்கு உயிரி ழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் உள்ள துருக்கி தூதரகத்துக்குச் சென்று, அங்குள்ள அனுதாபப் புத்தகத்தில் கையெழுத்திட்டார். அத்துடன், இலங்கை மக்களின் பிரார்த்தனைகள் துருக்கிய அரசாங்கத்துடனும் மக்களுடனும் உள்ளன எனவும் தெரிவித்தார்.

# கெஹலியவுக்கு எதிரான வழக்கு மார்ச் 9ஆம் திகதி!

கொழும்பு, பெப். 10

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹீன்கெந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

அரச அச்சகக் கூட்டுத்தாபன நிதியைப் பயன்படுத்தி 2012 இல் வெகுஜன ஊடக அமைச்சரான கெஹலியவின் ஒரு மாத கையடக்கத் தொலைபேசி கட்டணத்தைச் செலுத்தி அரசாங்கத்திற்கு சட்டவிரோதமாக 230, 984 ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் இந்த ஊழல் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

(அ)

# ஆர்ப்பாட்டங்களினால் ரூ. 1 பில்லியன் இழப்பு!

கொழும்பு, பெப். 10

பல முக்கியமான துறைகளின் பணியாளர்கள் நேற்று முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாக, நாடு 1 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளதாக சிரேஷ்ட பொருளாதார

நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்தின் புதிய வருமான வரிக் கொள்கைக்கு எதிராக வைத்தியர்கள் மற்றும் பல்வேறு துறையினர் நேற்று முன்தினம் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக நாட்டுக்கு ஒரு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் ஏற்பட்ட இந்த இழப்பு இலங்கையின் அபிவிருத்திக்கு பாரிய தாக்கமாகும் என்றும் பிரியங்க கூறினார்.

இவ்வாறான எதிர்ப்புக்கள், இலங்கையின் உலகளாவிய பங்காளிகளுக்கு தவறான சமிக்ஞையை அனுப்பியுள்ளதாக மற்றும் ஒரு பொருளாதார நிபுணர் குறிப்பிட்டார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை மின்சார சபை, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இலங்கை துறைமுக அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும்

வடிகாலமைப்பு சபை, பல வங்கிகள், இலங்கை விமான போக்குவரத்து, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட 40 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் புதிய வருமான வரிக் கொள்கையை எதிர்த்து நேற்று முன் தினம் போராட்டங்களை முன்னெடுத்தன.

இதேவேளை, இந்த போராட்டங்களின் மத்தியில் புதிய உழைக்கும்போதே செலுத்தும் வரியில் சில விலக்களிப்புக் களை அரசாங்கம் அறிவித்தது.

இதன்படி தமது மாத வருவாயில் இருந்து அரச மற்றும் தனியார் பணியாளர்களுக்கு மருத்துவக் கொடுப்பனவு, வாகனம் உட்பட்ட சில கொடுப்பனவுகளுக்கு விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(அ)

# 3 இலட்சம் ரூபா கையூட்டு பெறமுயன்ற பிரபல பாடசாலையின் ஆசிரியர் கைது!

கொழும்பு, பெப். 10

மாணவர் ஒருவரை பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்காக 3 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகக் கோரிய, குருநாகலில் உள்ள பிரதான பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த பாடசாலையின் உயர்தர கலைப் பிரிவுக்கு பொறுப்பான தலைமை ஆசிரியரே நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரை உயர்தர கலைப் பிரிவில் சேர்த்துக் கொள்வதற்காக மூன்று இலட்சம் ரூபாவை மாணவனின் தந்தையிடம் கோரிய சந்தேக நபரான ஆசி ரியர், அதனை பெற்றுக் கொள்வதற்காக குருநாகல் நகருக்குச் சென்றபோது, இலஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அனுராதபுரம் மாணவரின் தந்தை செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஆசிரியர் குருநாகல் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(அ)

# தந்தையின் கொடுமை தாங்க முடியாது 35 கிலோ மீற்றர் தூரம் சென்ற சிறுவன்!

கொழும்பு, பெப். 10

திம்புலாகல பிம்பொகுன கிராமத்தைச் சேர்ந்த 12 வயதுடைய பாடசாலை செல்லும் மாணவன் ஒருவர் சைக்கிளில் சுமார் 35 கிலோமீற்றர் தூரம் பயணித்துள்ளார்.

கடந்த 08ஆம் திகதி தந்தையின் கொடுமைகளை தாங்கிக் கொள்ள முடியாமல் சென்ற சிறுவன் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சிறுவனை தேடிச் சென்ற பொலிஸார் பெற்றோருக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்ததன் பின்னர் மகனை பெற்றோரிடம் ஒப்படைத் துள்ளனர். தந்தை அடித்துத் துன்புறுத்துவதகால் பூனானியில் வசிக்கும் தாயை தேடிச் சென்றதாக சிறுவன் பொலிஸாரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

நாமல்கம பிரதேசத்திலுள்ள கால்நடை கண்காணிப்பாளர் ஒருவரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் சிறுவனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்துள்ளனர். பட்டினியால்வாடிய சிறுவனுக்கு உணவு மற்றும் பானத்தை வழங்கியதை அடுத்து, தந்தை மற்றும் சித்தியை அழைத்து எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக வெலிகந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

காணாமல்போன திம்புலாகல, பிம்போகுன, கிராமத்தைச் சேர்ந்த குறித்த 12 வயது சிறுவனை தேடுவதற்காக 50 பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழுவொன்று தயார்படுத்தப்பட்டிருந்ததாக அரலகங்வில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(அ)

# மதுபானக்கடை வைத்திருப்போர் பாராளுமன்றத்துக்கு வரக்கூடாது!

## ராஜித சேனாரத்ன கூறுகின்றார்



கொழும்பு, பெப். 10

**மதுபானக்கடை உள்ளவர்கள் பாராளுமன்றம் செல்வ தற்குத் தடை விதிக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரி வித்தார்.**

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாஸவால் முடியாது என்று இல்லை. அவருடன் நல்ல பொருளாதார நிபுணர்கள் உள்ளார்கள். ஆனால், ரணில் விக்கிரமசிங்க நல்ல அனுபவசாலி. அதைத்தான் பார்க்கின்றேன்.

மதுபானக் கடை உள்ளவர்கள் பாராளுமன்றம் செல்வதற்குத் தடை விதிக்கவேண்டும். நாட்டில் 4 ஆயிரம் மதுபானக் கடைளுக்கு அனுமதிப் பத்திரம் உண்டு. அதில் 2 ஆயிரம் மது பானக் கடைகள் அரசியல் வாதிகளுடையவை.

வட்டிக்காரன் - மதுபானக் கடைக்காரன் - விபசார விடுதி நடத்துகின்றவர்கள் எல்லோரும் பாராளுமன்றம் வந்தால் நாட்டின் நிலைமை என்ன? அவர்கள் செய்வது சமூக சேவை அல்ல. சமூக சீரழிப்பையே அவர்கள் செய்கின்றனர்.

பாராளுமன்றத்திலுள்ள 225 பேரும் ஒன்றுதான் என மக்கள் ஏன் கூறுகிறார்கள். இவ்வாறானவர்கள் அதிகமாக பாராளுமன்றில் இருப்பதால்தான்.

இவ்வாறானவர்களுக்கு மக்கள் வாக்களிப்பதில்லை என்று தீர்மானம் எடுத்துவிட்டார்கள். இவர்களிடம் பணம் இருக்கின்றது. சேர் என்று யாரும் அழைப்பதில்லை. அதற்காகத்தான் அவர்கள் பாராளுமன்றம் வருகின்றார்கள்.

ஆனால், நாங்கள் பாராளுமன்றம் வருவதற்கு முன்பே பொலிஸார் எங்களுக்குச் சலூட் அடித்துவிட்டார்கள். நோயாளிகளை வைத்தியசாலைக்கு அழைத்து வந்து சலூட் அடித்துவிட்டுதான் நோயாளிகளை எங்களிடம் ஒப்படைப்பார்கள்.

இந்தச் சலூட்டுக்கு ஆசைப்பட்டு நான் பாராளுமன்றம் வரவில்லை. இருந்த நல்ல தொழிலையும் விட்டுவிட்டு மக்கள் சேவை செய்வதற்காகவே பாராளுமன்றம் வந்தேன்.

ஐக்கிய மக்கள் சக்தி இன்னும் பிரபலமாகவே உள்ளது. எனக்கு தினமும் புலனாய்வு அறிக்கை கிடைக்கின்றது. அதை வைத்தே இதைச் சொல்கின்றேன்.

நானோ அல்லது சம்பிக்க - குமார வெல்கமவோ எல்லோரும் பிரிந்து நின்றாலும் போராட்டத்தைத் தொடங்கியதும் ஒன்று சேர்வோம். நாங்கள் வெவ்வேறு கருத்துக் கள் உடையவர்கள். சில விடயங்களில் ஒன்றுபடுகின்றோம். சில விடயங்களில் வேறுபடுகின்றோம் - என்றார். (அ)

# கோதுமை மாவின் விலையை குறைக்க நடவடிக்கை தேவை

## சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள்

கொழும்பு, பெப். 10

பொறுப்பான அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு கோதுமை மாவின் விலையை மக்கள் தாங்கும் அளவுக்கு குறைக்க வேண்டும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ கோதுமை மாவின் சில்லறை விலை அதிகபட்சமாக 240 ரூபாவாக அதிகரித்துள்ளது என சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை ரூ.193 ஆக இருந்தது. நாட்டின் ஏழை, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் கோதுமை மா பிரதான உணவாக மாறியுள்ளது.

எனவே, நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் வர்த்தக அமைச்சு இந்தப் பிரச்னையில் தலையிடவேண்டும்.

முன்னதாக கோதுமை மாவின் விலையை குறைப்பதற்கான விடயத்தில் தலையிட்டமைக்காக வர்த்தக அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

ஆனால், இந்த திடீர் விலைவாசி உயர்வால், யாருக்கு தரகுக்கட்டணம் கிடைக்கும் என்ற சந்தேகம் உள்ளது. அப்பாவி மக்களுக்கு எரியும் பிரச்னையாக இது உள்ளது.

பிரதான கோதுமை மா இறக்குமதியாளர்களிடம் இந்த மாபியாவை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (அ)

# மூன்று நாள் போராட்டத்தை ஆரம்பிக்கும் அஞ்சல் ஊழியர்

கொழும்பு, பெப்.10

இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் சங்கம் நேற்று முதல் மூன்று நாள் போராட்டத்தை நாடளாவிய ரீதியில் அனைத்து தபால் நிலையங்களிலும் ஆரம்பித்துள்ளனர்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கை மற்றும் வங்கி வட்டி விகிதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக அதன் அமைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார். (அ)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வுக்கு பரிந்துரை செய்க!

## தொழில் அமைச்சிடம் இ.தொ.கா கோரிக்கை

கொழும்பு, பெப். 10

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான பரிந்துரையை முன்வைக்கும்படி, சம்பள நிர்ணய சபைக்கு பணிப்புரை விடுக்குமாறு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம், கோரிக்கை விடுப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

பணவீக்கத்தால் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச்சுமை அதிகரிப்புக்கமைய சம்பள உயர்வு வழங்குமாறு கோரப்படவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தனது அதிகாரப்பூர்வ ருவிட்டர் பக்கம் ஊடாக இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் உட்பட இதர விடயங்களை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் தற்போது அமுலில் இல்லை. அதனை புதுப்பிப்பதற்கு தொழிற்சங்கங்கள் முற்பட்டாலும், பெருந்தோட்டக் கம்பனிகள் ஆர்வம் காட்டவில்லை.

இதனால் சம்பள நிர்ணய சபையின் தலையீட்டுடனேயே தொழிலாளர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. எனவே, தற்போதைய வாழ்க்கை சுமை அதிகரிப்புக்கமைய, சம்பள உயர்வுக்கான பரிந்துரையை முன்வைக்கும் அதிகாரம் சம்பள நிர்ணய சபைக்கு உள்ளது.

# சீனாவுக்கான விமான சேவை மீண்டும் வாரத்திற்கு 3 முறை

கொழும்பு, பெப். 10

சிறிலங்கன் எயார்லைன்ஸ் சீனாவுக்கான விமான சேவைகளை வாரத்துக்கு மூன்று முறை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது.

சீனா தனது எல்லைகளை மீண்டும் திறந்த நிலையில், சீனாவுக்கான வணிக விமானச் சேவைகளை ஏப்ரல் 2023 முதல் வாரத்தில் இருந்து ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவில் ஷாங்காய், பீஜிங் மற்றும் குவாங்சூ ஆகிய இடங்களுக்கு விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வார நாட்களில் திங்கள், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கொழும்பில் இருந்து ஷாங்காய்க்கு விமானங்கள் புறப்படும் மற்றும் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் முறையே ஷங்காயிலிருந்து கொழும்புக்கு வர திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து பெய்ஜிங்கிற்கான விமான சேவைகள் ஏப்ரல் 3 இல் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பீஜிங் நோக்கி புறப்படவுள்ளது. கொழும்பு திரும்பும் விமானங்கள் குறித்த தினத்திற்கு மறுநாள் இயக்கப்படவுள்ளன. சிறிலங்கன் தற்போது கொழும்பு மற்றும் குவாங்சூ இடையே வாராந்திர விமானத்தை இயக்குகிற நிலையில், இரண்டாவது விமான சேவை மார்ச் 4 அன்று இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கொழும்பிலிருந்து குவாங்சோவுக்கான விமானங்கள் இயக்கப்படவுள்ள நிலையில் குவாங்சோவிலிருந்து கொழும்புக்குத் திரும்பும் விமானங்கள் ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயக்கப்படவுள்ளன. (அ)

# இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்ய சுவிஸ் அரசாங்கம் உதவி

கொழும்பு, பெப். 10

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சுவிற்சர்லாந்து அரசாங்கம் உதவிகளை வழங்கியுள்ளது.

அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பிற்கான சுவிட்சர்லாந்து முகவர் நிறுவனத்தினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் சுவிற்சர்லாந்து சுமார் 800,000 சுவிஸ் பிராங்குகளை உதவியாக வழங்கியுள்ளது.

விவசாயத்தில் ஈடுபடும் கிராமிய சமூகத்திற்கு இந்த நிதி உதவி மூலம் நலன்கள் வழங்கப்பட உள்ளதாக இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதரகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் உலக உணவு திட்டத்தின் மூலம் இந்த உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

வறட்சி ஏற்படக்கூடிய ஐந்து விவசாய மாவட்டங்களைச் சேர்ந்த 1000 குடும்பங்களுக்கு தலா 50,000 ரூபா நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு சுவிற்சர்லாந்து பல்வேறு வழிகளில் உதவி வருவதாக இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் டொமினிக் பொர்கலர் தெரிவித்தார்.

இலங்கையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அவர் கூறினார். (அ)

# நிலக்கரி கப்பலுக்கு செலுத்த பணமில்லை

கொழும்பு, பெப். 10

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலக்கரி கப்பலுக்கு பணம் செலுத்துவதில் சிக்கலை நிலை உருவாகியுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 11 நிலக்கரி கப்பல்களுக்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் நேற்று மற்றுமொரு நிலக்கரி கப்பல் நாட்டை வந்தடைந்தது. குறித்த இரண்டு கப்பல்களுக்கும் 30 வீதம் மட்டுமே பணம் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 70 வீத கட்டணத்தை நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைந்ததும் அவற்றை தரையிறக்குவதற்கு முன்னர் செலுத்தவேண்டும். இந்த நிலையில் கட்டணத்தைச் செலுத்துவதற்கான போதுமான நிதி இல்லை என இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிலக்கரி எதிர்வரும் 6ஆம் திகதி வரை மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி முதல் 30ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் 23 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழர் தேசத்தின் உள்ளூராட்சி சனநாயகமும் இருட்டினில் குருட்டாட்டம் ஆடும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும்!



செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு போராடிக்கொண்டிருக்கின்றது என்று வெளித் தோற்றத்திற்கு தோன்றினாலும் அது உண்மையானதாக தெரியவில்லை. வெளிநாட்டுப் படுகடனையும் அந்நிய செலாவணிப் பற்றாக்குறையினையும் முகாமைசெய்வதற்கான கடதாசிப் போராட்டம் தான் இப்போது முனைப்பு பெற்றுள்ளது. இதனால் ஏற்படும் சாதகமான அடைவுகள் எதுவும் உடனடியாக இலங்கைத் தீவில் வாழும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ பொருளாதார சுமைகளைக்குறைக்கவோ போவதில்லை.

மாறாக சீனாவும் இந்தியாவும் உடன்படக்கூடிய கடன்மீளமைப்பு நிபந்தனைகளும் அதனடிப்படையில் சர்வதேச நாணய நிதியம் வழங்கக்கூடிய கடனுதவிகளும் இலங்கை செலுத்த வேண்டிய கடன்களுக்கான கால அவகாசத்தை நீடித்துக்கொடுப்பதாகவும் மேலும் பாரியளவான புதிய கடன்களை பெறுவதற்கான தகுதியை இலங்கைக்கு வழங்குவதாகவுமே அமையும்.


ஒட்டுமொத்தத்தில் இப்போதைய தலைமுறையும் அதன் தலைவர்களும் செய்த தவறுகள் ஊழல்கள், மோசடிகள், கொள்ளைகள் ஆகியவற்றிற்கான பொறுப்பினை அடுத்த தலைமுறைமேல் சுமத்தும் அயோக்கியத்தனம்தான் இங்கு நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

இலங்கையினை இன்றைய கையறு நிலைக்கு தள்ளிய முதன்மையான காரணங்களுக்கு தீர்வு காணப்படாமலும் பொருளாதாரக் குற்றங்களைச் செய்தவர்களை வெளிப்படுத்தி அவர்களை செயலற்றவர்களாக ஆக்கி தண்டிக்காமலும் பாதுகாத்துக்கொண்டு இலங்கையினை அதன் பொருளாதார அதளபாதாளத்திலிருந்து மீட்டெடுத்தல் என்பது சாத்தியமற்றது.

இதனை சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதிநிறுவனங்கள் அறிந்திருக்கும்படியால்தான் உடன்பாடுகளை எட்டுவதில்காலநீட்சி தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. ஆனாலும் இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்களது பொய்யான பரப்புரைகளை சாதாரண குடிமக்கள் மீது தொடர்ச்சியாக முன்னெடுத்துக் கொண்டேதான் இருக்கின்றார்கள். பொய்யுரைத்தலும், வரலாற்று மாயைகளை உருவாக்குதலும், இனவாதப் பூதங்களை உருவாக்கி சிங்கள பௌத்த மக்களை அச்சமூட்டி தங்கள் நலன்களைத் தக்க வைப்பதும் தான் இலங்கைத் தீவின் அரசியல் பாரம்பரியமாகதொடர்கின்றது. இது தான் இத்தீவின் சாபமாகவும் மாறியுள்ளது.

தமிழ்களின் அரசியல் செல்நெறியைத் தீர்மானிப்பதாக தம்பட்டமடிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இந்த விடயத்தில் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல.

மக்களின் சனநாயக உரிமைகளையும் தன்னாட்சி உரிமைகளையும் அங்கீகரிப்பதற்கான செயல்முறையே தேர்தல் ஆகும். மக்கள் தங்களின் ஆளுகை நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து, அவர்களைக்கொண்டு தங்களைத் தாங்களே ஆளுகை செய்து, தங்கள் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் கட்டமைக்கும் உன்னதமான கடப்பாடே தேர்தல் மூலம் முன்னெடுக்கப்படவேண்டும்.




ஆனால், இங்கு நடப்பதோ வேறு. தங்களது கட்சியின் முதன்மையான அங்கத்தவர்களுக்கும் அடியாட்களுக்கும் ஆளுகை நிறுவனங்களின் கதிரைகளை பெற்றுக்கொடுத்து, தங்களது பலத்தை பரிசீலனை செய்வதும், ஆளுகை நிறுவனங்களில் கட்டைப்பஞ்சாயத்து நடத்துவதற்குமான களமாக உள்ளூராட்சி மன்ற தேர்தல்களும் அவற்றுக்கான போட்டிகளும் கட்டமைக்கப்பட்டுள்ளது.



இலங்கைத்தீவின் சிங்கள தேசத்தின் அரசியல் எவ்வாறான கோலத்திலும் இருக்கலாம். இருக்கட்டும்.

ஆனால், தமிழர் தேசத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும் இத்தகைய கோமாளித்தனமான சிந்தனைகளாலும் சின்னத்தனமான செயற்பாடுகளாலும் சிதைக்கப்பட நாம் அனுமதிக்கலாமா? பேசவேண்டிய தருணத்தில் பேசி உரிய மாற்றங்களை முன்னெடுக்காமல் கைகட்டி வாய்பொத்தி மௌனித்து நாம் இருக்கலாமா?

**எங்கள் முன் உள்ள கடமையாது?**

உள்ளூராட்சி சபைகளும் ஏனைய அடிமட்ட சமூகநிறுவனங்களும் ஏன் ஈழத்தமிழர்களாகிய எங்களுக்கு முதன்மையானது என்பதனை நாம் இவ்விடத்தில் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

> **இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா நடக்காதா என்பது ஐம்பதுக்கு ஐம்பதாகவே உள்ளது. ஆனால் மக்களின் ஒற்றுமையினைச் சிதைக்கும் முயற்சிகளும் முரண்பாடுகளை விதைக்கும் வாய்ப்புகளும் நூறுவீத வாய்ப்புகளைக் கொண்டவைகளாகவே உள்ளன. இவற்றை நாம் முறியடிக்கவேண்டும்.**

கடந்த எட்டு தசாப்தங்களுக்கு மேலாக சிங்கள மேலாதிக்க ஒடுக்குமுறையின் இடைவிடாத அழுத்தத்திற்கும் இன அழிப்பிற்கும் உள்ளாகியுள்ள ஒரு சமூகம், காலநீட்சியிலும் வலுவிழக்கவிடப்படாமல் மிகவும் துல்லியமாக திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படும் தமிழரின் பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்புகள் மீதான சிதைப்புகளும் அழிவுகளும், சனநாயக ஆட்சிக்கட்டமைப்புக்களில் தமிழ்மக்கள் கொண்டிருக்கக்கூடிய மறுக்கமுடியாத உரிமைப்பங்கினைச் சிதைக்கும் சட்டமுறையையானதும் கபடநோக்கம் கொண்டதுமான நிலஅபகரிப்புகளும் வளஅபகரிப்புகளும், அபிவிருத்திக்கான உரிமையினை மறுத்து இருப்பினைச் சிதைக்கும் தேசிய வளப்பங்கீட்டுக் கோட்பாடுகளும் கொள்கை விதிகளும் என பல பரிமாணங்களில் தமிழர் தேசம் சிதைக்கப்பட்டுக்கொண் டிருக்கின்றது. இதுதான் இன்றைய யதார்த்தமாகவும் உள்ளது. இத்தகைய நிலைமையில் தமிழ்தேசத்தின் எதிர்காலம் மூன்று முதன்மையான திசைகளில் ஒற்றைக் கருப்பொருளிலிருந்து முன்னெடுக்கப்படவேண்டும். தமிழ்தேசத்தின் விடுதலையும் செழுமையும் இருப்பும் ஒடுக்குபவரிடமிருந்து கிடைக்கும் கடதாசி அதிகாரங்களிலிருந்து மட்டும் கட்டியெழுப்பப்படுவதில்லை.

தன்னாட்சி உரிமையும் அதிகாரப் பகிர்வும் கிடைத்தவுடன் மாயாஜாலவித்தை போன்று தமிழர் தேசம் மாற்றமடைந்து விடப்போவதில்லை. தற்போது தமிழர் தேசத்தை ஆக்கிரமித்துள்ள அரசியல் அயோக்கியத்தனங்களும் சமூக வக்கிரங்களும் சண்டித்தனங்களும் போதைப்பொருள் மாபியாக்களின் விரிந்த சாம்ராஜ்யமும் உள்ளூர் காவாலிகளை இயக்கும் மற்றும் கட்டளைகளையிடும் மறைகரங்களும் ஒரே நாளில் காணாமல் போய்விடப் போவதில்லை.

வறுமையிலும் இல்லாமையிலும் வாழும் பெருமளவு மக்களின் கரங்களில் அமுதசுரபியின் அட்சயபாத்திரம் கிடைக்கப்போவதுமில்லை. பதவிக் கதிரைகளுக்காக கட்டைப்பஞ்சாயத்து நடத்தும் தமிழர் அரசியல்வாதிகள் எவரும் தனது பதவியிலிருந்து தானாக விலகி வழிவிட்ட நியூசிலாந்தின் ஜசிந்தா ஆர்டேர்ன் ஆக மாறிவிடப்போவதுமில்லை. எனவே தமிழ் தேசத்தின் விடுதலை என்பது தமிழர் தேசத்தைக் கட்டியெழுப்பும் முதன்மையான கடமையே. அது எங்கள் பொறுப்பும் கூட. தமிழர் தேசத்தைக்கட்டியெழுப்புதல் வெறுமனே வீதிகள் அமைத்தல், தொழிற்சாலைகள் உருவாக்கி வேலைவாய்ப்புக்களை பெருக்கல், பாடசாலைகளையும் பல்கலைக்கழகங்களையும் பௌதீக வளங்களால் நிரப்புதல், பாதிக்கப்பட்டவர்க்கும் பசியாய் உள்ளவர்களுக்கும் பச்சாத்தாபத்துடன் உதவியளித்தல் என்ற பட்டியலுக்குள் மட்டும் முடக்கப்பட்டுவிட முடியாது.

தேசம் கட்டியெழுப்பப்படவேண்டும் என்றால் தேசத்தின் மக்களின் மனங்களும் பண்பாடும் பயிற்சியும் பாரம்பரிய விழுமியங்களும் சமூகப் பொறுப்பும் சரியான நெறியில் முன்னோக்கிய திசையில் வளர்த்தெடுக்கப்பட்டு பேணப்படவேண்டும். கடந்த நாற்பது வருட குரூரமான வாழ்வியல் அனுபவங்களினால் விரக்தியடைந்து சிதைந்துபோன சமூகம் மீட்டெடுக்கப்படவேண்டும்.

நாங்கள் இரண்டு மாதிரிகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஒன்று தென் சூடான் மற்றையது இஸ்ரேல் தேசம். சூடானின் வடக்கு பகுதியை மையமாக கொண்டு மேலெழுந்த இஸ்லாமிய மேலாதிக்க சர்வாதிகார அரசிடமிருந்து பிராந்திய சுயாட்சியை வேண்டி போராடிய தென்சூடானின் கிறீஸ்தவ மற்றும் மரபார்ந்த நம்பிக்கைகளைக்கொண்ட (Christians and Indigenous - animist) தென்சூடான் மக்கள் பலபடிமுறைகளைத் தாண்டி சர்வதேசத்தின் உதவியுடன் சர்வஜனவாக்கெடுப்பினால் தீர்மானிக்கப்பட்ட சுதந்திரமான தனிநாட்டை வென்ற பின்பும் பெருமளவு கனிமவளங்களும் எண்ணைவளமும் நிறைந்த தென்சூடானின் அமைதியும் சுபீட்சமும் மீட்டெடுக்கமுடியாத சவால்களாகவே இருந்தன. அதற்கு காரணம் விடுதலைக்கு பின்னரான காலத்தில் விரிவடைந்த

(09ஆம் பக்கம் பார்க்க)

# பழனி முருகன் கோவில் கருவறையில் அமைச்சர் சேகர்பாபு நுழைந்தாரா?

## பிராயச்சித்த கும்பாபிஷேகம் கோரும் பாஜக வானதி

பழனி கோவில் குடமுழுக்குக்கு முந்தைய நாள், ஏற்பாடுகளை கவனிக்க கோவிலுக்கு சென்ற அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அதிகாரிகளுடன் கருவறைக்குள் நுழைந்தார் என்றும் இதனால், மீண்டும் பிராயச்சித்த கும்பாபிஷேகம் நடத்தவேண்டும் என்றும் கோரியுள்ளார் பாஜக சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன்.

"அமைச்சர், அதிகாரிகள், ஆளும் கட்சி பிரமுகர்களின் ஆகம மீறலால் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்த தலைமை அர்ச்சகர், பிராயசித்த கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளார்" என்றும் தெரிவித்துள்ளார் வானதி.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்று, தமிழ்நாட்டின் மிக முக்கிய ஆன்மிகத் தலங்களில் ஒன்று.

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தில் உள்ள இந்தக் கோவிலில் ஜனவரி 27 ஆம் திகதி குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடந்து முடிந்துள்ளது. அதில் அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு கலந்து கொண்டார்.

அதற்கு முந்தைய நாள் ஏற்பாடுகளை கண்காணிப்பதற்காக அமைச்சர் சேகர் பாபு அறநிலையத் துறை அதிகாரிகளுடன் கோயிலுக்குச் சென்றார். அப்போது, அமைச்சர், அவருடன் வந்த அதிகாரிகள் உள்ளிட்டோர் கோவில் கருவறைக்குள் சென்றதாக கூறி சில வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவியுள்ளன. இதையடுத்து, கோயிலில் ஆகம விதி மீறப்பட்டுள்ளது. இதனால் பிராயசித்த கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என அர்ச்சகர் என கூறப்படும் ஒருவர் பேசும் ஆடியோ செய்தி ஒன்றும் பரவியுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர், அதிகாரிகள் கோயில் கருவறையில் நுழைந்ததாக குற்றம்சாட்டியுள்ள வானதி, பிராயச்சித்த கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் கருவறைக்குள் அத்துமீறி நுழைந்த இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், அதிகாரிகள் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். தலைமை அர்ச்சகரின்



வேண்டுகோளை ஏற்று பிராயசித்த கும்பாபிஷேகம் நடத்த வேண்டும்.

எந்தவொரு திருக்கோவிலிலும் மகா கும்பாபிஷேகம் நடந்தால், 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடக்க வேண்டும் என்பது ஆகமம். ஆனால் மகா கும்பாபிஷேகம் நடந்து ஒரு வாரத்திற்குள் பல லட்சக்கணக்கான பக்தர்கள் வரும் தைப்பூசம் வருகிறது.

மகா கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களும், துறை அதிகாரிகளும், ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலரும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோவில் கருவறைக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்துள் ளது அதிர்ச்சியும், தாங்க முடியாத மன வேதனையையும் அளிக்கிறது. இது அப்பட்டமான ஆகம மீறல். அது மட்டுமல்ல, இந்துக்களின் மத உணர்வுகளை காயப்படுத்தும் செயல். எனவே, இதற்காக, அமைச்சர் முருக பக்தர்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். இனி இதுபோன்ற ஆகம மீறல்கள் நடக்காது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்," என்று கூறியுள்ளார் வானதி.

**சித்தர்களால் உருவாக்கப்பட்ட கோயில்**

"கருவறைக்குள் யாரும் நுழையவில்லை. கருவறைக்கு முன்னதாக இருக்கும் அர்த்த மண்டபத்திற்கு சென்று தான் சுவாமி தரிசனம் செய்தார்கள்" என்று உண்மையை மறைக்க, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் முயற்சிப்பது கடும் கண்டனத்துக்கிறது. இது வெந்தப் புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

இந்து சமய அறநிலையத் துறை சட்டங்களின் படியே, மதச்சார்பற்ற தமிழக அரசோ, அந்த மதசார்பற்ற அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளோ, திருக்கோயிலின் வழிபாடு, ஆகமம், கும்பாபிஷேகம் போன்ற விவகாரங்களில் தலையிடக்கூடாது. அதனை, சம்பந்தப்பட்ட திருக்கோவில் அறங்காவலர்கள் குழுவும், அர்ச்சகர்களும்தான் முடிவு செய்ய வேண்டும். பழனி முருகன் கோவில் என்பது சித்தர்களால் உருவாக்கப்பட்ட கோயில். எனவே, அங்கு பாரம்பரியமாக சித்தர் வழி வந்த குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மரியாதைகள் வழங்கப்பட வேண்டும்" என்றும் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார் வானதி.

**விஷம செய்திவெளியிடுவது வானதியின் வாடிக்கை : சேகர் பாபு**

கோவை பேரூர் பட்டீஸ்வரர் கோவில் மற்றும் பேரூர் ஆதீனத்தில் நடந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அமைச்சர் சேகர் பாபு, பிறகு செய்தியாளர்களிடம்பேசும்போது வானதியின் அறிக்கைக்கு பதில் அளித்தார்.

"ஊடகங்களில் வர வேண்டும் என்பதற்காக விஷ



மத்தனமான செய்திகளை வெளியிடுவது தான் அவரது (வானதியின்) வாடிக்கையாக உள்ளது. தமிழ்நாட்டை தாண்டி இந்தியாவை தாண்டி உலகம் முழுவதும் உள்ளவர்கள் பழனி கோவில் குடமுழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டதை பாராட்டி வருகிறார்கள். அதில் கரும்புள்ளி ஏற்படுத்த வேண்டும் என அர்த்தமற்ற செய்தியை அவர் வெளியிட்டது மிகவும் வருத்தமளிக்கிறது.

கும்பாபிஷேகம் முடிந்து 10 நாட்கள் கழித்து தற்போது தைப்பூசமும் முடிந்த பிறகு இவ்வாறு பிரசாரம் செய்வது மிகவும் வருத்தம் அளிக்கிறது. காலம் காலமாக கோவிலை வைத்து ஒரு சிலர் வருமானம் பார்த்து வந்தது ஒழிக்கப்பட்டு, தற்போது அனைவரும் சமம் என்கிற நிலை உருவாக்கப்பட்டுள்ளது." என்றார்.

---

# தமிழர் தேசத்தின் உள்ளூராட்சி சனநாயகமும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் இனக்குழுமங்களுக்கு இடையிலான ஆதிக்கப்போராட்டமும் வளங்களைக் கட்டுப்படுத்துவதற்கான போட்டியும் விடுதலைக்காக கட்டியெழுப்பப்பட்ட இராணுவ கட்டமைப்பின் அங்கத்தவர்கள் வளங்களையும் வர்த்தக முயற்சிகளையும் உரித்தாக்கி கட்டுப்படுத்துவதில் இருந்த ஏகபோகமும். இவை அனைத்தும் விடுதலையின் பெரும்பயனை தென்சூடான் மக்களுக்கு கிடைக்கமுடியாமல் செய்ததோடு தொடர்ச்சியாக பல ஆயிரக்கணக்கான உயிர்கள் உள்ளூர் இனக்குழுக்களுக்கிடையிலான மோதல்களில் தொடர்ச்சியாக இரத்தம் சிந்திக் கொண்டிருக்கின்றனர்.

மறுபக்கத்தில் இஸ்ரேல் யூதர்கள் பல நூற்றாண்டுகளாக உலகெங்கும் சிதறி வாழ்ந்தாலும் தங்களது வாக்களிக்கப்பட்ட பூமிக்கு (Promised Land) திரும்பி தேசத்தைக் கட்டமைக்கும் கனவினை மெருகூட்டி வளர்த்தெடுப்பதிலும் பொருத்தமான வெளிப்படையானதும் மறைமுகமானதுமான மூலோபாயங்களூடாக தங்களுக்கான தேசத்தை (மண், மக்கள், மாண்பு, பொருண்மியம்) வாக்களிக்கப்பட்ட பூமியில் கட்டியெழுப்புவதிலும் மிகவும் துல்லியமாக திட்டமிட்டு உழைத்தார்கள். சர்வதேசம் தலையிட்டு தங்களுக்கான நாட்டினை அங்கீகரிக்கும்வரை அவர்கள் வாழாவிருக்கவில்லை.

1948ல் ஐ.நா.வின் பிரகடனம் ஊடாக பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் என்ற இரண்டு நாடுகள் அங்கீகரிக்கப்படுவதற்கு பலதசாப்தங்களுக்கு முன்னரிலிருந்தே யூதர்கள் பாலைவன மண்ணில் கிபூட்ஸ் எனப்படும் விவசாயப்பண்ணைகளை மட்டுமன்றி குடியிருப்புகளையும் பள்ளிக்கூடங்களையும் வைத்தியசாலைகளையும் தொழிற்சாலைகளையும் வேறு இன்னோரன்ன வசதிகளையும் மக்களையும் கொண்ட குடியிருப்புகளையும் ஊர்களை உருவாக்கியிருந்தனர். சுதந்திர தேசத்திற்கான அதிகாரத்திற்கும் அப்பால் மண்ணும் மக்களும் அவர்களின் மாண்பும் பொருண்மியமும் தேசத்திற்கு முதன்மையானது என்பதனை யூதர்கள் முழுமையாக உணர்ந்திருந்தார்கள். அதற்காக ஆக்ரோசத்துடன் உழைத்தார்கள். அதுவே இன்றைய இஸ்ரவேலின் வெற்றிக்கு அடித்தளமாக இருந்தது. இஸ்ரேல் நாடு இன்று பாலஸ்தீனத்தின் மீது மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பினை எந்த நிலையிலும் எங்களால் அங்கீகரிக்க முடியாவிட்டாலும் அவர்கள் தங்கள் நாட்டினைக் கட்டமைத்த மாதிரியின் படிப்பினையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.

**தமிழர் தேசத்தின் மூலைக்கற்களாய் உள்ளூராட்சி சபைகள்:**

தமிழர் தேசத்தின் உள்ளூராட்சி சபைகளை நாங்கள் தென்னிலங்கையின் உள்ளூராட்சி சபைகளை ஒத்ததாக வைத்திருக்கவேண்டும் என்ற அவசியம் எமக்கில்லை. நீண்ட யுத்தம், இடப்பெயர்வு, அபிவிருத்தி புறக்கணிப்பு, வளச்சூறையாடல்களும் சுரண்டல்களும் என பல பரிமாணங்களில் சிதைக்கப்பட்ட எங்கள் தேசத்தின் அடித்தள மூலைக்கற்களாக நாங்கள் எங்கள் உள்ளூராட்சி சபைகளைக் கட்டியெழுப்பவேண்டும். அவை சமூகத்தின் ஆளுமைகளையும் ஆளுகை உரிமையினையும் வளர்த்தெடுக்கும் தளங்களாகவும் வார்த்தெடுக்கும் உலைக்களங்களாகவும் மாற்றப்பட வேண்டும். வீதி பெருக்குவதற்கும் குப்பைகள் அகற்றுவதற்கும் தெரு விளக்குகள் பொருத்துவதற்கும் மட்டுமான நிறுவனங்களாகவோ அல்லது அரசியல் கட்சிகளின் கட்டைப்பஞ்சாயத்துக்களுக்கும் பலப்பரீட்சைகளுக்குமான சதுராட்டக் களங்களாகவோ மாற்றப்படக்கூடாது. தன்னாட்சிக்காக போராடும் மக்கள் தங்களது ஆளுகைத் திறன்களை கட்டியெழுப்புகின்ற நிரூபிக்கின்ற தளங்களாக தமிழர் தேசத்தின் உள்ளூராட்சி கட்டமைக்கப்பட வேண்டும். வாய்மொழியாகத் தேசியத்தைப் பாதுகாக்கின்றதற்காக வாக்களிக்குமாறு மக்களைத் தூண்டி அவர்களிடையே முரண்பாடுகளை விதைத்து ஊரை இரண்டுபடுத்தும் செயற்பாடுகள் யாவற்றையும் தமிழ் மக்களின் கட்சிகள் நிறுத்தவேண்டும். இல்லையேல் மக்கள் அக்கட்சிகளையும் அவ்களின் வேட்பாளர்களையும் புறக்கணிக்கவேண்டும். உள்ளூராட்சி ஆளுகைக்குள் ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்ற சடு குடுவிளையாட்டு நிறுத்தப்பட வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளும் ஒன்றாக இணைந்து உள்ளூர் ஆளுகையினை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க வேண்டும். ஆனால், கடந்த காலத்தில் நடந்தது என்ன?

வல்வெட்டித்துறை நகரசபை தொடக்கம் திருகோணமலை நகரசபை, திருகோணமலை உப்புவெளி பிரதேசசபை. யாழ்ப்பாண மாநகரசபை என நீண்டுசெல்லும் பட்டியலில் தமிழ்தேசிய கட்சிகளும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் செய்த சித்துவிளையாட்டுகள் எத்தனை? இந்தக்கட்சிகளும் அவர்களது வேட்பாளர்களும் தான் மீண்டும் தேசியம் பேசிக்கொண்டு மேடைக்கு வந்திருக்கின்றனர். தாங்கள் முன்னெடுக்கும் அரசியல் மற்றும் ஏனைய பேரம் பேசல்களுக்கு பலம் சேர்க்கும் அங்கீகாரத்திற்காக மக்களின் வாக்குகளை கோரி வந்திருக்கின்றனர்.

இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா நடக்காதா என்பது ஐம்பதுக்கு ஐம்பதாகவே உள்ளது. ஆனால் மக்களின் ஒற்றுமையினைச் சிதைக்கும் முயற்சிகளும் முரண்பாடுகளை விதைக்கும் வாய்ப்புகளும் நூறு வீத வாய்ப்புகளைக் கொண்டவைகளாகவே உள்ளன. இவற்றை நாம் முறியடிக்கவேண்டும்.

இருட்டினில் குருட்டாட்டம் ஆடுகின்ற அனைத்து அரசியல் மோசடியாளர்கள் அனைவரும் களத்திலிருந்து அகற்றப்படவேண்டும். துமிழர் தேசத்தின் உள்ளூராட்சி என்பது தமிழர் தேச நிர்மாணத்தின் அடித்தளத்து மூலைக்கற்களாக மாற்றப்படவேண்டும்.

சிந்திப்போமா? செய்வோமா? இல்லை கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிய முட்டாள்களாக மீண்டும் ஆவோமா?

(தாய்வீடு)

# மின்சார கட்டணத்தை அதிகரிப்பதே ஒரேவழி!

## மின்சக்தி அமைச்சர்

கொழும்பு, பெப். 10

எரிபொருள் மற்றும் மின் கட்டணத்தை அதிகரிப்பதை தவிர மாற்றுத் திட்டம் ஏதும் தற்போது கிடையாது. 24 மணித்தியாலங்களும் மின்சாரத்தை விநியோகிக்க வேண்டும் என்றால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் தற்போதைய நிலை அதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை தெளிவுபடுத்தியுள்ளது.

நெருக்கடியில் இருந்து மீள்தற்கான ஒரே வழி காணப்படுகின்றது அந்த வகையில்



எத்தகைய அரசியல் நோக்கங்கள் இருந்தாலும் அந்த வழி தொடர்பில் சிறந்த தெளிவை நாட்டு மக்களும் பாராளுமன்றத்தில் அனைவரும் தெளிவு படுத்துவது அவசியமாகும்.

ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையை எதிர்க்கட்சியினர் பகிஷ்கரித்தனர். சிறந்த கல்விமான்களான பேராசிரியர்கள் கூட அதனை பகிஷ்கரித்தமை வியப்புக்குரியது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பது,வரி அதிகரிப்பு, மின்சார கட்டணம் அதிகரிப்பு, எரிபொருள் அதிகரிப்பு என்பது தொடர்பில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. ஒருபோதும் அரசாங்கம் அதனை விரும்பவில்லை எனினும், நாட்டில் தொடரும் பற்றாக்குறையை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதற்கு அதனைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது.

அதனையே தமது உரை மூலம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அந்த வகையில் அனைவரும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது அவசியம். மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான தமது நிலைப்பாட்டை எதிர்வரும் 15 ஆம் திகதி அறிவிப்பதாக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உயர்தர பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின்துண்டிப்பு அமுல்படுத்துவதையிட்டு வருத்தமடைகிறோம் - என்றார். (ஐ)

# மருத்துவர் சிவரூபன் இன்று விடுதலையாவார்!

கிளிநொச்சி, பெப். 10

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வந்த பளை பிரதேச மருத்துவமனையின் முன்னாள் பொறுப்பதிகாரி மருத்துவர் சிவரூபனை கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையிலேயே அவரை விடுதலை செய்ய நீதிமன்ற உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு அமைய இன்று காலை 9 மணிக்கு அவர் விடுதலை செய்யப்படுவார் என்று அறிய வருகின்றது. (ஐ)

# பொலிஸ் அலுவலரின் மனைவி சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, பெப். 10

வாழைச்சேனை - போத்தாளை பிரதேசத்தில் வீடு ஒன்றில் இருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மனைவியான ஆசிரியை உருகுலைந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கல்குடா பிரதான வீதி, போத்தாளையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயாரான 52 வயதுடைய சகுந்தலாதேவி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த ஆசிரியையின் கணவர் யாழ். இளவாலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருவதுடன், அவரின் மூன்று பிள்ளைகளும் கொழும்பில் வசித்துவருகின்றனர். ஆசிரியை தனிமையில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவ தினமான நேற்று காலை வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசிய நிலையில் கிராம சேவகர் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து குறித்த வீட்டுக்குச் சென்றபோது வீட்டின் கதவு, யன்னல்கள் உடைந்திருந்ததுடன் உயிரிழந்த நிலையில் ஆசிரியை சடலமாக காணப்பட்டார்.

தடவியல் மற்றும் குற்றதடுப்பு பிரிவின் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சயனைற் செலுத்தப்பட்டு தினேஷ் சாப்டர் கொலை!

கொழும்பு, பெப். 10

பிரபல வர்த்தகர தினேஷ் சாப்டர் சயனைற் செலுத்தப்பட்டு கொல்லப்பட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தினேஷ் சாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகள் அளுத்கடை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றவேளை இந்த விவரம் வெளியானது.

குற்றப் புலனாய்வு பிரிவினர் மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜெயசூரிய முன்னிலையில் இந்த விடயங்களை சமர்ப்பித்தனர்.

கழுத்து நெரிக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்கள் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியவை இல்லை என்றும் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், தினேஷ் சாப்டரின் 'ஐ போன்' மற்றும் 'ஐ பாட்'டினை தடயவியல் சோதனைக்கு உட்படுத்தியவேளை பல முக்கிய விடயங்கள் தெரிய வந்துள்ளன. தினேஷ் சாப்டர் தனது மனைவிக்கும் மனைவியின் குடும்பத்தினருக்கும் எழுதிய பல ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**10.02.2023**

**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**10.02.2023**

**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்று பெரும் அமைதியின்மை!

## முக்கிய உறுப்பினர்கள் வெளிநடப்பு

**மட்டக்களப்பு, பெப். 10**

**மட்டக்களப்பு மாநகரசபையில் நிதிக்குழு அறிக்கையை கிழித்தெறிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் உட்பட பிரதி முதல்வர் ஆகியோர் சபை வெளிநடப்பு செய்தமையினால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.**



மட்டக்களப்பு மாநகர சபையின் இறுதி அமர்வு நேற்று வியாழக்கிழமை காலை மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் வழமையான சம்பிரதாயங்களுடன் ஆரம்பமானது.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தலைமையுரையை தொடர்ந்து நிதிக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து அதற்கு சபையின் அனுமதியை கோரினார்.

குறித்த நிதிக்குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது, அது வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் எனவும் நிதிக்குழுவின் பங்குபற்றல் இல்லாமல் முதல்வரினால் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனினும், குறி த்த அறிக்கை மாநகரசபையின் கட்டளைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த குழுவின் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குமாறும் முதல்வர் கோரினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர்களும் ஏனைய சுயேச்சைக் குழு உறுப்பினகளும் குறித்த அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் வாக்கெடுப்பும் கோரினர்.

இதன்போது சபையில் அமைதியின்மை ஏற்பட்டதுடன் கடுமையான வாக்குப்பிரதிவாதகளும் இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர் ஜெயச்சந்திரன் நிதிக்குழுவின் அறிக்கையை கிழித்தெறிந்து சபையை விட்டு வெளியேறிச்சென்றார்.

இதன்போது தமிழீழ விடுதலை இயக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி முதல்வர் க. சத்தியசீலன், புளொட் கட்சி உறுப்பினர், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உறுப்பினர்கள், சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் என பலர் சபையிலிருந்து வெளியேறிச் சென்றனர்.

ஆனாலும், சபை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றன.

38 உறுப்பினர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாநகர சபையில் இறுதியாக சபையில் 14 உறுப்பினர்களேயிருந்த நிலையில் நிதிக்குழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் ஏனைய விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

(அ)

# மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருடன் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் பேச்சு

மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. காலமதி பத்மராஜா தலைமையில் உலக உணவுத் திட்ட அவசரநிலை இணைப்பாளர் ஜோஸ்பன்ட் முஸோங்காவுடன் கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 6 பிரதேச செயலகங்களில் போதிய வருமானமற்ற மக்களுக்கு உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் விஷன் ஆகிய அமைப்புக்கள் இணைந்து கடந்த காலங்களில் உலர் உணவுப் பொருட்களை வழங்கின.

60 நாட்களை கொண்ட உலக உணவுத் திட்டத்தின் உலர் உணவுப் பொதிகள் வழங்கல் செயற்பாட்டின்போது எதிர்கொண்ட சவால்கள், பிரச்னைகள் மற்றும் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் தொடர்பாக அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இந் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள், நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், சமுர்த்திப் பயனாளிகள், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட குடும்பங்கள், குறைந்த பொருளாதார வசதியுடைய குடும்பங்கள் என்ற வகைகளில் கிராம உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்ட நபர்கள் பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக உணவு திட்டத்தின் உயரதிகாரி கீரன் பொல், மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணிய மூர்த்தி,பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ் குமார், உலக உணவு திட்டம் நிகழ்ச்சி திட்ட உதவியாளர் திருமதி.பத்மரஜனி கேதிஸ்வரன், வேர்ல்ட் விஷன் அதிகாரி என பலரும் கலந்து கொண்டனர்.

# சந்திரநேருவின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்

அம்பாறை, பெப். 10

படுகொலை செய்யப்பட்ட அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேருவின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட் டில் பாண்டிருப்பில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துசானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அமரர் அரியநாயகம் சந்திரநேருவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 2005.02.07ஆம் திகதி வெலிகந்தை பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலில் படுகாயமுற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



மறுநாள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

# பொய்யான செய்திகளைப் பரப்பி அரசியல் இன்பம் காண்கிறார்கள்!

## தமிழரசு வாலிபர் முன்னணி தலைவர்

மட்டக்களப்பு, பெப். 10

என்னுடைய செயற்பாடுகளும் வேகமும் என்றும் குறையாது. அது எங்களது கட்சிக்கும் தேசியத்திற்குமான பயணத்தில் தொடரும். தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்கள் தான் என் தொடர்பான பொய்யான செய்திகளைப் பரப்பி அரசியல் இன்பம் கண்டுகொண்டிருக்கின்றார்கள் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவரும், கோரளைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான கி.சேயோன் தெரிவித்தார்.

கட்சி உறுப்பினர்களுடன் முரண்பாடு, கட்சியை விட்டு வெளியேறல் என்றவாறாக அண்மையில் வெளியாகிய செய்திகள் தொடர்பில் விளக்கமளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த சில நாட்களாக என் தொடர்பிலான பொய்யான சில செய்திகள் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஊடகங்கள் வாயிலாகவும், சமூக வலைத்தளங்களிலும் என் தொடர்பில் செய்திகள்

பகிரப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக நான் தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறியதாகவும், கட்சியின் சில நபர்களுடன் நான் முரண்பட்டதாகவும் அச்செய்தி பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனை நான் முற்றாக மறுக்கின்றேன்.

நாங்கள் ஒரு பாரம்பரியக் கட்சியில் அங்கத்துவம் வகிக்கின்றோம். கட்சி என்ற ரீதியில் பல கருத்து முரண்பாடுகள் வருவது இயல்பான விடயம்.

கட்சியின் தலைமையோடு கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் பல விடயங்களைப் பேசியிருக்கின்றேன். அது தொடர்பில் நான் தலைமைக்கு அனுப்பிய கடிதத்தில் இந்த விடயங்கள் நிறைவேற்றப்படா விட்டால் நான் வாலிபர் முன்னணித் தலைவர் பதவியைத் துறப்பதற்கும் தயாராக இருக்கின்றேன் என்றுதான் தெரிவித்திருந்தேன். ஆனால் அதை வைத்து நான் தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறிவிட்டேன், கட்சியின் சில நபர்களோடு முரண்பட்டு அதன் காரணமாக வெளியேறிவிட்டேன் என்றவாறான செய்திகள் எல்லாம் வந்துள்ளன. தமிழ் மக்களின் விடுதலை சார்ந்து தமிழ்த் தேசியத்தின் விடிவு சார்ந்து பயணிக்கின்ற இந்தக் கட்சியில் இருந்து வெளியேறுவேன் என்று நான் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.

கட்சியின் உறுப்புரிமையில் என்றும் இருப்பேன். எனக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கும் எதுவிதமான முரண்பாடும் இல்லை.

சுமூகமான ஒரு உறவு இருக்கின்றது. அவர் அவருடைய கடமைகளைச் செய்து கொண்டிருக்கின்றார்.

எனவே இவ்வாறான பொய்யான செய்திகளை தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்கள்தான் பரப்பி அரசியல் இன்பம் காண்கின்றார்கள்-என்றார். (அ)

# ஓட்டமாவடியில் போராட்டம்



மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் அரச பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் கவனயீர்ப்பு பேரணி நேற்று கடந்த செவ்வாய்க்கிழமை ஓட்டமாவடியில் இடம்பெற்றது.

எக்ஸத் ஊடக வலையமைப்பு ஏற்பாடு செய்த இப்பேரணி சமூக மட்ட அமைப்புக்களின் பங்களிப்புடன் வாழைச்சேனை பொலிஸ் நிலைய சந்தியில் இருந்து ஆரம்பமாகி, மட்டக்களப்பு - கொழும்பு வீதியினூடாக கோறளைப்பற்று மத்திபிரதேச செயலகத்தை அடைந்தது.

அதன் பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் முகவரியிடப்பட்ட மகஜரினை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் யூ.எல்.அப்துல் ஹமீட்டிடம் பேரணி ஏற்பாட்டாளர்கள் வழங்கினர்.

இந்த பேரணியில் கலந்து கொண்டோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து இடம்பெறும் அரச பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்தல், மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு தொடர்ந்து இடம்பெற்றுவரும் எல்லை பிரச்னை, மீள்குடியேறிய காணிகளுக்கான உரிமத்தை பெற்றுக்கொள்ளாமை போன்றவற்றை வலியுறுத்தி, இப்பிரச்னைகளுக்கு தீர்வு பெறுவதற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரியை அரசாங்க அதிபராக நியமிக்க வேண்டும் என கோஷங்களை எழுப்பினர். (அ)

ஈழநாடு





துருக்கி-சிரியா நிலநடுக்கம்:

# உயிரிழப்பு எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்தது!

அங்காரா, பெப். 10

துருக்கி - சிரியா எல்லையில் அடுத்தடுத்து ஏற்பட்ட நில நடுக்கங்களால் எல்லை நகரங்களில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

இந்த நிலநடுக்கம் பல்லாயிரக்கணக்கானோரின் உயிரை பலி எடுத்துள்ளது.

நேற்றைய காலை நிலவரப்படி நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15,383 ஆக அதிகரித்துள்ளது. துருக்கியில் 12,391 பேர் உயிரிழந்துள்ளனர். சிரியாவில் 2,992 பேர் உயிரிழந்துள்ளனர்.

50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். கடும் பனிப்பொழிவுக்கு இடையே கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ள மக்களை மீட்க மீட்பு படையினர் போராடி வருகின்றனர்.

இடிபாடுகளை தோண்டத்தோண்ட சடலங்கள் தென்பட்ட வண்ணம் உள்ளன. எனவே, பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. மீட்பு பணிகளின்போது எடுக்கப்பட்ட வீடியோக்கள், புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

நிலநடுக்கத்திற்குப் பிறகு துருக்கிக்கும் சிரியாவுக்கும் இடையிலான பாப் அல்-ஹவா கடவை வீதிகள் மோசமாக சேதமடைந்ததால் மூடப்பட்டுள்ளது.

ஆனால், சிரியாவுக்கு உதவ மேலும் இரண்டு எல்லை வாயில்களைத் திறக்கவுள்ளதாக துருக்கியின் வெளியுறவு அமைச்சர் மெவ்லுட் கவுசோக்லு தெரிவித்தார். (அ)

# துருக்கியில் 17 மணி நேரம் போராடி சகோதரனை காப்பாற்றினார் சிறுமி



அங்காரா, பெப். 10

வடக்கு சிரியாவில் நிலநடுக்க இடிபாடுகளுக்கு இடையே சிக்கிக்கொண்ட சிறுமி, 17 மணிநேரம் வரை தனது சகோதரனை காப்பாற்ற போராடிய வீடியோ வைரலாகி வருகிறது.

அவர்கள் இருவரும் வீட்டில் இருக்கும்போது, நிலநடுக்கத்தில் சிக்கியுள்ளனர். இதில், மரியம் என்ற அந்த 7 வயதுச் சிறுமி, இடிபாடுகளுக்கு இடையே சிக்கி படுத்த நிலையில் இருக்கிறார். அவருக்கு அருகே சிறுமியின் சகோதரன் படுத்து கிடக்கிறார். இருவரும் நகர முடியாமல் கிடக்கின்றனர்.

எனினும், சகோதரன் மீது தூசு உள்ளிட்ட எதுவும் விழுந்து விடாமல் இருக்க தலையில் கையை கொண்டு சிறுமி போர்த்தியபடி காணப்படுகிறார். சிமெந்து தூண்களுக்கு கீழே சிக்கியிருந்த இரண்டு பேரையும் மீட்பு குழுவினர் மீட்டு சிகிச்சைக்கான அனுமதித்துள்ளனர்.

இதேபோல் சிரியாவின் அப்ரின் நகரில் நிலநடுக்கத்தால் நொறுங்கிய மருத்துவமனைக்குள் தாய் இறந்த நிலையில், தொப்புள் கொடி அறுக்கப்படாத நிலையில் ஒரு பச்சிளம் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது. (அ)

# திடீரென லண்டனுக்கு சென்ற ஷெலென்ஸ்கி!

## மன்னர் சாள்ஸுடனும் முக்கிய சந்திப்பு
## போர் விமானங்கள் வழங்க கோரினார்



லண்டன், பெப். 10

உக்ரைன் அதிபர் ஷெலென்ஸ்கி இன்று திடீரென லண்டனுக்கு வந்து பிரிட்டிஷ் தலைவர்களைச் சந்தித்தார்.

எவரும் எதிர்பாராத விதமாக அவர் பக்கிங்காம் அரண்மனை சென்று மன்னர் சாள்ஸையும் சந்தித்தார்.

ஷெலென்ஸ்கி போர் ஆரம்பித்தது முதல் அணியும் அதே காக்கி நிற ஆடையில் காணப்பட்டார்.

வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் ஷெலென்ஸ்கியின் உரையைக் கேட்பதற்காக நூற்றுக்கணக்கான எம்.பிக்கள் கூடியிருந்தனர். உணர்ச்சி பூர்வமான தனது உரையில் பிரிட்டனுக்கு நன்றி தெரிவித்தார். போர் விமானங்களை தந்து உதவுமாறு மேற்கு நாடுகளிடம் அவர் கோரிக்கை விடுத்தார். சாதனைகள் புரிந்த உக்ரைன் விமானி ஒருவரது தலைக்கவசத்தை லண்டனில் பரிசளித்த அவர், அதில் காணப்பட்ட "எங்களிடம் சுதந்திரம் இருக்கிறது. அதைப் பாதுகாக்க இறக்கைகளைத் தாருங்கள்" என்ற வாசகத்தை உரக்கக் கூறினார். "சுதந்திரம் வெல்லும். ரஷ்யாவின் தோல்வியை நாங்கள் பார்க்கப்போகின்றோம். அது உலகில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்" - என்று ஷெலென்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்த பின்னர் முதற் தடவையாக லண்டனுக்கு வருகை தந்த ஷெலென்ஸ்கி, பக்கிங்காம் அரண்மனையில் மன்னர் சாள்ஸையும் முதல் முறையாகச் சந்தித்தார். 45 நிமிடங்கள் நீடித்த அந்தச் சந்திப்பில்,

இன்றைய நிலையில் உக்ரைன் நாட்டின் விமானிகள் ஒவ்வொருவரும் எங்களைப் பொறுத்தவரை மன்னர்களே என்று ஷெலென்ஸ்கி வர்ணித்தார் என அறிவிக்கப்படுகிறது.

"நாங்கள் அனைவரும் உங்களைப் பற்றி நீண்ட காலமாகவே கவலைப்படுகிறோம், உங்கள் நாட்டைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறோம், அதனை என்னால் சொல்ல முடியாது" என்று மன்னர் சார்ள்ஸ் அச்சமயம் அவரிடம் கூறினார் என பக்கிங்காம் அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பிரிட்டிஷ் றோயல் விமானப்படையின் ஜெற் விமானங்கள், மற்றும் போர் டாங்கிகள் அனைத்தையும் உக்ரைனுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் பிரதமர் ரிஷி சுனாக்கைக் கேட்டிருக்கிறார்.

அதிபர் ஷெலென்ஸ்கியை வரவேற்கும் நிகழ்வில் அவரும் கலந்து கொண்டார். (அ)

# எந்த வகை விமானத்தை உக்ரைனுக்கு வழங்குவது?

## ஆராய்கிறது பிரிட்டன்

லண்டன், பெப். 10

உக்ரைனுக்கு எந்த விமானத்தை வழங்க முடியும் என்பதை ஆராய்ந்து வருவதாக பிரிட்டன் பாதுகாப்புச் செயலர் பென் வாலஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால், இது ஒரு நீண்ட கால தீர்வு என்றும் பயிற்சி விமானிகளுக்கு பல ஆண்டுகள் ஆகலாம் என்றும் வலியுறுத்தினார்.

உக்ரைனுக்கு போர் விமானங்களை வழங்குமாறு வோலோடிமிர் ஷெலென்ஸ்கி பிரித்தானியாவை வலியுறுத்தியதை அடுத்து, இந்த கருத்து வந்துள்ளது.

ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பின்னர் முதன்முறையாக பிரித்தானியாவுக்கு விஜயம் செய்த உக்ரைன் ஜனாதிபதி, இதுவரை கிடைத்த உபகரணங்களுக்கு நன்றி தெரிவித்தார்.

ஆனால், பொருட்கள் தீர்ந்துவிட்டன என்றும் இது மோதலில் தேக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார். (அ)

# பிரிட்டனுக்கு ரஷ்யா எச்சரிக்கை!

மொஸ்கோ, பெப். 10

பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக், உக்ரைனுக்கான இராணுவ உதவியின் அடிப்படையில் "மேசைக்கு வெளியே எதுவும் இல்லை" என்று கூறிய சிறிது நேரத்திலேயே, ரஷ்யா ஐரோப்பிய உலகுக்கு ஒரு எச்சரிக்கையை அனுப்பியுள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்றுமுன்தினம் புதன்கிழமை லண்டனுக்குச் சென்று, தனது நாட்டுக்கு போர் விமானங்களை அனுப்புமாறு நட்பு நாடுகளை வலியுறுத்தினார்.

இதனிடையே, பிரிட்டனுக்கு வலுவான செய்தியை அனுப்பிய ரஷ்யா, பிரிட்டன் உக்ரைனுக்கு போர் விமானங்களை அனுப்பினால் அதற்குப் பதிலடி கொடுப்போம் என்று கூறியது. பிரிட்டன் தொடர்ந்து உதவி செய்தால் அது போரை மேலும் அதிகரிக்கும் என்றும் எச்சரித்துள்ளது.

லண்டனில் உள்ள மொஸ்கோ தூதரகத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி, "பிரிட்டிஷ் தரப்பின் எந்த நட்பற்ற நடவடிக்கைகளுக்கும் ரஷ்யா பதிலடி கொடுக்கும்" என்று பல ரஷ்ய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# பிரான்ஸும் ஜேர்மனியும் போரின் போக்கையே மாற்றக்கூடியவர்கள்!

பிரஸ்ஸல்ஸ், பெப். 10

பிரான்ஸும் ஜேர்மனியும் போரின் போக்கை மாற்றக்கூடியவர்கள் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் ஜேர்மனியின் அதிபர் ஓலாப் ஷோல்ஸ் ஆகியோருடன் நேற்று முன்தினம் புதன்கிழமை கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு போர் டாங்கிகள், நவீன போர் விமானங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளை வழங்குவதன் மூலம் பிரான்ஸும் ஜேர்மனியும் போக்கை மாற்றக்கூடியவர்களாக இருக்க முடியும்.

ஜெட் விமானங்களை வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறிய அவர், ஆயுதங்களை வழங்குவதற்கு மிகக் குறைவான காலமே இருப்பதாக எச்சரித்தார். இதேவேளை, உக்ரைன் பிரான்ஸின் ஆதரவை நம்பலாம் என்றும், உக்ரைனின் வெற்றிக்கு உதவுவதற்கும் அதன் நியாயமான உரிமைகளை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும் அந்த நாடு உறுதியாக உள்ளது என்றும் மக்ரோன் கூறினார்.

இதேபோல கருத்து தெரிவித்த ஸ்கோல்ஸ், நிலை மாறவில்லை. ரஷ்யா இந்த போரில் வெற்றி பெறக்கூடாது' எனக் கூறினார்.

இதன் பொருள் இரு நாடுகளும் போர் விமானங்களை வழங்க உறுதியளிக்குமா என்பது இப்போதைக்கு தெளிவாக இல்லை. (அ)



# 177 ஓட்டங்களுக்கு சுருண்டது ஆஸி!

நாக்பூர், பெப். 10

இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 177 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

சிறப்பாக பந்துவீசிய ஜடேஜா 5 விக்கெட்களைக் கைப்பற்றியதுடன், ரவிச்சந்திரன் அஸ்வின் மூன்று விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இந்தத் தொடரின் முதல் போட்டி நாக்பூரில் நேற்று தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் துடுப்பெடுத்தாட்டத்தைத் தெரிவு செய்தார்.

அந்த அணிக்காக வோர்ணர் மற்றும் கவாஜா, தொடக்க வீரர்களாக களம் கண்டனர். இருவரும் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் வெளியேறினர். கவாஜாவை சிராஜ் எல். பி. டபிள்யூ. முறையில் வெளியேற்றினார். வோர்ணரை போல்ட் ஆக்கினார் ஷமி.

தொடர்ந்து லபுஷேன் மற்றும் ஸ்மித் என இருவரும் நிதானமாக இனிங்ஸை அணுகி ஆடினர். இருவரும் 82 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். உணவு நேர இடைவேளைக்கு பிறகு அவுஸ்திரேலிய அணி சரிந்தது. லபுஷேன், 49 ஓட்டங்களில் ஜடேஜா பந்து வீச்சில் விக்கெட்டை இழந்தார். விக்கெட் காப்பாளர் கே.எஸ்.பரத் அபாரமாக அவரை ஸ்ரொம்ப் செய்திருந்தார். அடுத்த பந்தில் மேட் ரென்ஷாவை வெளியேற்றினார் ஜடேஜா. தொடர்ந்து 37 ஓட்டங்கள் எடுத்திருந்த ஸ்மித்தையும் ஆட்டமிழக்க செய்தார்.

பின்னர் அலெக்ஸ் ஹாரி, பட் கம்மின்ஸ், முர்பி, ஹாண்ட்ஸ்காம்ப் மற்றும் பொண்ட் ஆகியோர் விக்கெட்டை இழந்தனர்.

முதல் இனிங்ஸில் 63.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 177 ஓட்டங்கள் எடுத்தது அவுஸ்திரேலியா.

இந்திய அணியின் ஜடேஜா 22 ஓவர்கள் வீசி 47 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தினார். இதில் 8 ஓட்டமற்ற ஓவர்களும் அடங்கும். அஸ்வின் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அதன் தலைவர் ரோஹித் சர்மா, கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது.

ஓரளவுக்கு சிறப்பான தொடக்கத்தை இந்த இணை ஏற்படுத்தியது. 76 ஓட்டங்களை இந்திய அணி எடுத்திருந்தபோது கே. எல். ராகுல் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரை முர்பி வீழ்த்தியிருந்தார். அவரைத் தொடர்ந்து சகலதுறை வீரரான அஸ்வின் மூன்றாவது வீரராகக் களம்புகுந்தார்.

நேற்றைய தினம் 24 ஓவர்கள் நிறைவடைந்த போது முதல்நாள் ஆட்டம் நிறைவடைந்தது. இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 77 ஓட்டங்களை சேர்த்திருந்தது. ரோஹித் சர்மா 56 ஓட்டங்களுடனும் அஸ்வின் ஓட்டம் எதையும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



## 450 விக்கெட்களை வீழ்த்தி அஸ்வின் புதிய சாதனை

நாக்பூர், பெப். 10

டெஸ்ட் கிரிக்கெட்டில் 450 விக்கெட்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார் இந்தியாவின் சுழல் பந்து வீச்சாளர் அஸ்வின்.

அவுஸ்திரேலிய அணி இந்தியா சென்று தற்போது டெஸ்ட் தொடரில் ஆடுகின்றது. இதில், நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸிலேயே அவுஸ்திரேலியா சகல விக்கெட் களையும் இழந்ததது.

அந்த அணியின் அலெக்ஸ் ஹாரியை 36 ஓட்டங்களுடன் அஸ்வின் ஆட்டமிழக்க செய்தார். இது அவரின் 450ஆவது விக்கெட்டாக அமைந்தது.

இதன் மூலம், டெஸ்ட் கிரிக்கெட்டில் 3,000 ஓட்டங்கள், 450 விக்கெட்களை எடுத்த முதல் இந்தியர் - முதல் ஆசிய வீரர் என்கிற புதிய சாதனையை அஸ்வின் படைத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 3000 ஓட்டங்கள், 450 விக்கெட்களை எடுத்த வீரர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ண் முதலிடத்தில் இருக்கிறார். இவர் 3154 ஓட்டங்களுடன் 708 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். இரண்டாவது இடத்தில் இங்கிலாந்தின் ஸ்ருவர்ட் பிரோட் 3550 ஓட்டங்களுடன் 566 விக்கெட்களுடன் உள்ளார். இப்போது இந்தியாவின் அஸ்வின் மூன்றாவது இடத்தில் 3043 ஓட்டங்கள், 450 விக்கெட்களுடன் உள்ளார்.



## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் ஜூன் 7 ஓவலில் இறுதியாட்டம்!

டுபாய், பெப். 10

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் 2ஆவது பருவகாலத்தின் இறுதி ஆட்டம் இங்கிலாந்தின் லண்டனிலுள்ள தி ஓவல் மைதானத்தில் ஜூன் 7 முதல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

12ஆம் திகதி மேலதிக நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட டெஸ்ட் போட்டிகள் நடைபெற்ற இடமாக தி ஓவல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் முதலிரு இடங்களில் வரும் அணிகள் இந்த இறுதி ஆட்டத்தில் மோதவுள்ளன. 2 ஆண்டு காலகட்டத்தில் 24இற்கும் அதிகமான டெஸ்ட் தொடர்களில் விளையாடப்படும் 61 போட்டிகளின் முடிவு அடிப்படையில் அந்த இரு இடங்களுக்கான அணிகள் தேர்வாகும்.

தற்போதைய நிலையில் அந்த புள்ளிகள் பட்டியலில் அவுஸ்திரேலியா முதலிடத்திலும், இந்தியா 2ஆவது இடத்திலும் உள்ளன. இலங்கை, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றன.

இதில் தற்போது அவுஸ்திரேலியா மட்டும் இறுதி ஆட்டத்தில் தனக்கான இடத்தை உறுதி செய்யும் நிலையில் இருக்கிறது. முன்னதாக, இங்கிலாந்தின் சௌதாம்டன் நகரில் உள்ள தி ஏஜஸ் பௌல் மைதானத்தில் நடைபெற்ற முதல் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் (2021) இந்தியாவை வீழ்த்தி நியூசிலாந்து அறிமுக சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மேற்கிந்தியா - சிம்பாப்வே டெஸ்ட் போட்டி சமநிலை!

புலவாயோ, பெப். 10

மேற்கிந்தியத்தீவுகள் - சிம்பாப்வே அணிகள் மோதிய முதல் டெஸ்ட் புதன்கிழமை சமநிலையில் முடிவடைந்தது.

சிம்பாப்வேயின் புலாவயோ நகரில் கடந்த 4ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் முதல் இனிங்ஸில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 447 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இரண்டாவது இனிங்ஸில் ஆடிய சிம்பாப்வே அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 379 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 68 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸை தொடங்கியது. 60 ஓவர்களில் அந்த அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 203 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது.

இறுதியாக, 272 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு ஆடிய சிம்பாப்வே, கடைசி நாளான புதன்கிழமை முடிவில் 54 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 134 ஓட்டங்களை எட்டியிருந்தது. இதனால், போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகளின் தேஜ் நரைன் சந்தர்போல் போட்டியின் நாயகனாகத் தெரிவானார்.

(ஐ)



# '13' குறித்த போலி விம்பத்தை சிங்கள மக்கள் நம்பக்கூடாது!

## ஜீவன் தொண்டமான் கோரிக்கை



**கொழும்பு, பெப். 10**
**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் சகோதர சிங்கள மக்கள் அச்சம் கொள்ளவேண்டியதில்லை என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**

யட்டியாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மாகாண சபை முறைமை என்பது வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரித்தானது அல்ல.

நாட்டில் ஏனையப் பகுதிகளில் உள்ள மக்களும் அந்த முறைமையின் ஊடாக சிறந்த சேவையைப் பெறலாம்.

எனவே, 13 குறித்து உருவாக்கப்பட்டுள்ள போலி விம்பத்தை சிங்கள மக்கள் நம்பக்கூடாது.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையானது காலத்தின் கட்டாய தேவையாகும்.

அதிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதற்கு எங்கள் கட்சி முழு ஆதரவையும் வழங்கும் - என்றார். (அ)

# '13' ரணில் விரித்த பொறி அந்த வலையில் விழாதீர்!

## கோருகிறார் அனுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, பெப். 10
13ஆவது திருத்தச் சட்டம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரித்த பொறி என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ஜனாதிபதி அமுல்படுத்தமாட்டார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனது அதிகாரத்தை பாதுகாக்க மட்டுமே ஜனாதிபதி விரும் புவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி எப்பொழுதும் இவ்வாறான விளையாட்டுக்களை விளையாடுவதாகவும், இந்த வலையில் விழ வேண்டாம் என நாட்டு மக்களை கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# உயர்கல்விக்காக விபசாரத்தில் ஈடுபட்ட 14 யுவதிகள் சிக்கினர்!

கொழும்பு, பெப். 10
உயர்கல்விக்கு பணம் தேவைப்பட்டதால் விபசாரத்தில் ஈடுபட்ட 14 யுவதிகள் உட்பட 18 பேர் தலங்கமவில் கைது செய்யப்பட்டனர் என பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளம் பெண்கள் குழுவொன்றும், அந்த இடங்களின் முகாமையாளர்களாக இருந்த ஒரு குழுவினரும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த யுவதிகள் குழுவில் உள்ளவர்கள் கொழும்பில் இருந்து வெகு தொலைவில் உள்ள பிரதேசங்களில் வசிப்பவர்கள்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பெண்களை பணத்திற்காக விற்பனை செய்யும் நிலையங்கள் அதிகளவில் வளர்ந்து வருவதாக பாணந்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் கடுவெல நீதவான் நீதிமன்றத்திடம் பெறப்பட்ட தேடுதல் உத்தரவுக்கு அமைய, பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று யுவதிகளை தேடிச் செல்பவர்களை போன்று வேடமணிந்து இளம் பெண்கள் விற்பனை செய்யப்படும் நான்கு நிலையங்களுக்கு சென்றுள்ளனர்.

சோதனை நடத்தி கைது செய்யப்பட்ட இளம் பெண்களிடம் நடத்திய விசாரணையில், பொருளாதார நெருக்கடியால் உயர்கல்வி கற்க முடியாததால் பணம் சம்பாதிக்க இந்த தொழிலைத் தேர்ந்தெடுத்ததாக அவர்கள் தெரிவித்தனர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். (அ)

# மொரீஷியஸில் எரிபொருளை நிரப்பி புறப்பட்டது இலங்கை அகதிகள் படகு!

கொழும்பு, பெப். 10
18 அகதிகளை ஏற்றிச் செல்லும் இலங்கை மீன்பிடிப் படகு ஒன்று, மொரீஷியஸில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு, மீண்டும் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் சிலாபம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட இமுலா 0437 சி.எச்.டபிள்யூ என்ற மீன்பிடிப் படகே அகதிகளை ஏற்றியபடி பயணிக்கிறது. இந்த மீன்பிடிப் படகு மொரீஷியஸ் துறைமுகத்தை விட்டு புறப்பட்டுச் சென்றுவிட்டதாக, மொரீஷியஸ் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிவ கூத்தன் தெரிவித்தார்.

இருப்பினும், படகின் கப்டன் தனது அடுத்த இலக்கை குறிப்பிடவில்லை. இந்த படகு தமது நாட்டுக்கு வந்து சேருமென எதிர்பார்ப்பதாக ரீயூனியன் தீவின் அதிகாரியொருவர் தம்மிடம் தெரிவித்ததாகவும் சிவ கூத்தன் கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, இந்த அகதிகள் படகு மொரீஷியஸ் தேசிய கடலோர காவல் படையால் தடுத்து நிறுத்தப்பட்டது. படகுப் பயணத்தின் நோக்கம் குறித்து கேள்வி யெழுப்பப்பட்ட போது, ஆபிரிக்கா நோக்கிச் செல்லும் தாம் உணவு, எரிவாயு மற்றும் எரிபொருளை சேமித்து வைக்க விரும்புவதாக கப்டன் விளக்கினார்.

மொரிஷியஸ் அதிகாரிகள் அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்.

எரிபொருள் நிரப்புதல் முடிந்ததும், கடலோர காவல்படையினரின் துணையுடன் அவர் தனது பயணத்தைத் தொடர்ந்தார். மூன்று குழந்தைகள் உட்பட 18 பயணிகள் படகில் உள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல், இந்த படகு மொரிஷியஸ் பிராந்திய நீரில் இருந்தது.

டிசெம்பர் 4 ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்பட்டு, ஆபிரிக்க நாடு நோக்கிச் செல்ல விரும்புவதாக படகில் இருந்தவர்கள் தெரிவித்தனர். இந்த படகு ஜனவரி 15 ஆம் திகதி டியாகோ கார்சியாவுக்கு அருகில் தரித்து நின்றது அவதானிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, ரீயூனியன் அரசு வெளியிட்ட ஒரு அறிக்கையில், பெப்ரவரி 6 ஆம் திகதி இலங்கை மீன்பிடி படகு ரீயூனியன் தீவுக்கு வரலாம் என்று குறிப்பிட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ரீயூனியனுக்கு செல்லும் இலங்கைக் குடியேற்றவாசிகளை ஏற்றிச் செல்லும் இரண்டாவது படகு இதுவாகும்.

ஜனவரி 14 அன்று, 69 பேருடன் மீன்பிடிப் படகு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது. மார்ச் 2018 இல் இலங்கை யிலிருந்து ரீயூனியனுக்கு முதலாவது அகதிகள் படகு வந்ததில் இருந்து, இது வரை 466 பேருடன் 11 படகுகள் வந்துள்ளன. 314 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். (அ)

# மின்சார கட்டணத்தை அதிகரிக்கவேண்டாம்!

## பல தரப்பினரும் கோரிக்கை

கொழும்பு, பெப். 10
மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என பல தரப்பினரும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உத்தேச மின்சார கட்டண திருத்தம் தொடர்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்ற மக்கள் கருத்தறியும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். வர்த்தக சபை உறுப்பினர்கள், தொழில் நிறுவனங்களை பிரதிநிதித் துவப்படுத்தும் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் மின் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு எதிராக கருத்து தெரிவித்தனர். இந்தக் கருத்துக்களை மீளாய்வு செய்ததன் பின்னர் ஆணைக் குழு வின் தீர்மானம் அறிவிக்கப் படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# முஜிபுருக்கு பதிலாக மீண்டும் பாராளுமன்றம் வந்த பௌசி

கொழும்பு, பெப். 10
முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நேற்று காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இராஜினாமா செய்ததையடுத்து வெற்றிடமாகிய பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பௌசி நியமிக்கப்பட்டார்.

உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக முஜிபுர் ரஹ்மான் கடந்த மாதம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

ஏ.எச்.எம்.பௌசியை பாராளுமன்ற உறுப்பினராக அறிவிக்கும் வர்த்தமானி கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி தேசிய தேர்தல்கள் ஆணைக்கு ழுவினால் வெளியிடப்பட்டது.

ஒரு அனுபவமிக்க அரசியல்வாதி, ஏ.எச்.எம்.பௌசி பல அரசாங்கங்களில் பல அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளிலும் உறுப்பினராக இருந்துள்ளார். (அ)

# கொழும்பு வைத்தியசாலை விடுதிக்குள் மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஊழியர்!

கொழும்பு, பெப். 10
கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விடுதி ஒன்றில் சுகாதார உதவியாளர் ஒருவரின் அலுமாரியில் இருந்து 7 சாராயப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இரகசிய தகவலின் பேரில், மருத்துவமனை நிர்வாக பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு இந்த மதுப் போத்தல்களை கண்டுபிடித்தது. மதுபான போத்தல்களை அலுமாரியில் மறைத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் சுகாதார உதவியாளர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

மருத்துவமனையின் சில ஊழியர்களுக்கு விற்பனை செய்வதற்காக இந்த மதுப்போத்தல்கள் அவரது அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக வைத்தியசாலை பேச்சாளர் மேலும் கூறினார். இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த சுகாதார உதவியாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# வாக்குச் சீட்டுகள் அச்சிடல் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 10
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய சுமார் 70 ஆயிரம் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேலும், அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பட்டியல்கள் அனைத்தும் தற்போது கிடைத்துள்ளதாகவும் அரசாங்க அச்சகம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23 ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (அ)

## ஹெரோயின்...

அவர்கள் யாழ்ப்பாணம் நகரில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில்கூடி ஊசி மூலம் ஹெரோயின் போதைப் பொருளை எடுத்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ஐ)

## தமிழ்...

எனவே, கடும்போக்கை கைவிட்டு வடக்கு அரசியல் தலைவர்கள், நடுநிலை நோக்கி நகரவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.

அத்துடன், தான் ஜனாதிபதியாக இருந்தபோது வடக்கில் 95 சதவீத காணிகளை விடுவித்ததாக தெரிவித்த மைத்திரி, மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீட்டெடுக்க அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு பல தடவைகள் கேட்டுக் கொண்டுள்ளார். நாம் இப்போதும் சர்வகட்சி அரசாங்கமொன்றுக்கு ஆதரவு வழங்கத் தயாராகவே உள்ளோம்.

நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார். 13 தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் தற்போது சமூகத்தில் எழுந்துள்ளன.

87 களில் வடக்கு அரசியல்வாதியான சிவசிதம்பரம், இந்தியாவுக்கு சென்று, இலங்கை அரசாங்கத்தால் வடக்குக்கு அநீதிகள் இழைக்கப்படுவதாக தெரிவித்ததையடுத்துதான், பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இந்து - லங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டபோது நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு, அப்போதைய பிரதமர் பிரேமதாஸவும், பெரும்பாலான அமைச்சர்களும் அந்த நிகழ்விலும் கலந்து கொள்ளாமல் இருந்தார்கள்.

மேலும், இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, புலிகள் யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்றும் ஜே.வி.பியினர் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யவுள்ளார்கள் என்றும் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் தான், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ெஜயவர்த்தன இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இந்த நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டியைக் கோருவதானது, பெரும்பான்மையின மக்களையும், பௌத்த பிக்குகளையும் தூண்டிவிடும் செயலாகவே நாம் பார்க்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 13 பிளஸை தருவதாக ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் பான் கீ மூனுக்கு உறுதியளித்தார். பஸில் ராஜபக்ஷவும் இந்தியாவுக்கு 13 பிளஸை தருவதாக உறுதியளித்தார்.

இவ்வாறான உறுதி மொழிகளுக்குப் பின்னர்தான், இந்தப் பிரச்னை நாட்டின் பூதாகரமானது. 87 களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும், மாகாணசபை முறைமை வெற்றியா -தோல்வியா என ஆராயவில்லை.

நீண்ட காலமாக நீடித்துவரும் இந்தப் பிரச்னைக்கு, வடக்கு - கிழக்கு - தெற்கு அரசியல்வாதிகள், புத்திஜீவிகளை, மதகுருமார்களை ஒன்றிணைத்து சமாதானமானதொரு தீர்வை வழங்க வேண்டும் - என்றார். (அ)

## தொட்டிலையும் ஆட்டி...

சிவஞானம் சிறிதரன்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர்களுக்கு ஒன்றையாட்சிக்குள் தான் தீர்வு என்று மீண்டும் மீண்டும் கூறினால் இலங்கையால் ஒருகாலமும் மீண்டெழ முடியாது. எனவே, உலகிலுள்ள ஏனைய நாடுகளை போல சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வை முன்வைப்பதன் மூலமே நாட்டில் நீதியை, அமைதியை கொண்டு வர முடியும். சிங்களவர்களும், தமிழர்களும் இலங்கையின் இரண்டு தேசிய இனங் களாக இணைந்து வாழக்கூடிய ஒரு அரசியல் உரிமையையே கோருகிறோம்.

ஒற்றையாட்சி என்ற கோஷம் எழுப்பும் சிங்களத் தலைவர்களுக்கு இந்த நாடு இருண்ட யுகத்தை நோக்கி பயணிப்பது தெரியவில்லை. 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு 35 ஆண்டுகளாகிறது. இன்று அது உருத்தெரியாமல் போயுள்ளது. 13 ஆவது திருத்துக்கு எதிராக இன்று பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஜனாதிபதியின் ஆதரவு இல்லாமல் அது சாத்தியப்படாது.

தீர்வை வழங்கப்போவதாக சர்வதேசத்துக்கு ஒரு முகத்தை காட்டும் ஜனாதிபதி ரணில், மறுபுறம் பௌத்த பிக்குகளையும் இனவாதிகளையும் தூண்டிவிடுகிறார். அவரின் இந்த செயல் தொட்டிலையும் ஆட்டிவிட்டு, பிள்ளையையும் கிள்ளி விட்டு போன்று உள்ளது -என்றார். (அ)

## பொலிஸ்...

ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சர்வக் கட்சி மாநாட்டின் போது ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

காணி அதிகாரங்களை வழங்க வேண்டாம் எனக் கூறுகிறார்கள். ஆனால், காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. மாகாண சபையின் அமைச்சராக நான் கடமையாற்றியமையால், எனக்கு இந்த விடயம் தொடர்பாக நன்கு தெரியும்.

13 ஐ மீண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதா னது வடக்கையும் கிழக்கையும் இணைக்க வழிவகை செய்துவிடும். ஏனெனில், எமது அரசமைப்பில் இதற்கான ஏற்பாடுகள் அப்படியேதான் உள்ளன.

தமிழ் பிரிவினைவாதிகள் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டா லும், இலங்கைக்கு வெளியே தனி ஈழ அரசாங்கம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால், உத்தியோக பூர்வமல்லாத ஓர் இராணுவக்கட்டமைப்பு உருவாகிவிடும். சி. வி. விக்னேஸ்வரன் போன்ற பிரிவினைவாதிகள் வடக்கில் முதலமைச்சரானால், தனி ஈழத்துக்கான போர், இலங்கை இராணுவத்துக்கும் வடக்கின் பொலிஸாருக்கும் இடையில்தான் ஏற்படும். எனவே, மீண்டும் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் கைவைத்து, நாட்டையும் உங்களையும் ஆபத்தில் சிக்க வைக்க வேண்டாம் -என்றார். (அ)

## நிச்சயமற்ற...

இதற்கான காரணமாகும் என்று தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் என்ற முறையில், தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திய டைந்துள்ளதாக பகிரங்கமாக அறிவித் துள்ளீர்கள். எவ்வாறாயினும் வாக்குச் சீட்டு அச்சிடும் பணி இன்னும் ஆரம்பிக் கப்படவில்லை என அரச அச்சகம் அண்மையில் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

போதிய பணம் கிடைக்கவில்லை எனக் கூறி உரிய பணத்தை விடுவிக்குமாறு திறைசேரியையும் கேட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரத்தை ஆராய்ந்து, திட்டமிட்ட திகதியில் தேர்தலை நடத்தலாமா வேண்டாமா என்பது குறித்து அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழு வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவது மிகவும் அவசியம். பணம் இருக்கும் போது பணம் இல்லை என்று நிதி அமைச்சின் செயலாளரோ அல்லது வேறு எந்த செயலாளரோ அறிவிக்க முடியாது. ஆனால், நிதி அமைச்சின் செயலாளர் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் திறைசேரியில் பணம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வாறெனில் தேர்தலுக்காக கோரப்படும் பணம் கிடைக்கப் பெறுமா என்ற கேள்வி எழுகிறது - என்று கூறியுள்ளது.

## ஒற்றையாட்சியை...

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி சமஷ்டியை ஏற்படுத்துங்கள்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் எம். பி. நேற்று பாராளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார். கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரை எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி காத்திருக்க வைத்த உரையாக இருந்த நிலையில் அந்த உரை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அது நூறு வீதம் ஏமாற்றத்தையே தந்துள்ளது. 75 வருடங்களாக புரையோடி போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்றும், சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு வழங்கப்படும் எனவும் கூறியிருந்தார். ஆனால், சுதந்திர தினம் முடிந்து அவர் கொள்கை பிரகடன உரையை மேற்கொண்ட போதும் இனப்பிரச்னை தீர்வு குறித்து ஆக்கப்பூர்வமான எந்த திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை.

13 ஆவது திருத்தம் தொடர்பில் சில அதிகாரங்களை கையாள முயன்றபோது அது தொடர் பில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒற்றையாட்சிக்குள் உச்சபட்ச அதிகாரம் என்று கூறுவது ஏமாற்று கதை என்பதுடன் தமிழ் தரப்புளுடன் சேர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக செய்யும் துரோகமும் சதியுமே ஆகும். இந்த நாட்டை கட்டி யெழுப்ப வேண்டுமாயின் இனப் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். அதனை ஒற்றையாட்சிக்குள் செய்ய முடியாது - என்றார். (ஐ)

## இந்திய...

மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி வரவேற்றனர்.

இந்திய அரசின் நிதி பங்களிப்பில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பங்கேற்கவே இவர்கள் யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநரையும் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் பின்னர், யாழ். பொது நூலகத்தில் 250 மீனவர் குடும்பங்களுக்கு உலர உணவு பொருள்களை வழங்கி வைத்தனர். இன்றைய தினம் இவர்கள் திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை, “இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கப்படும். அத்துடன், இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்பது குறித்து அமைச்சர் எல்.முருகன் பேசுவார் என்றும் கூறினார். (ஐ)

## ஜனாதிபதி...

குடியுரிமையையும் துறக்க முன்வந்துள்ளார் என்றும் அந்த வட் டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பஸில் ராஜபக்ஷ தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார். பஸிலை மக்கள் நிராகரித்துவிட்டனர் என்பது தவறான தகவல். இதனை எதிரிகள் செயற்கையாக உருவாக்கி பரப்பி வருகின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (ஐ-சி)

## தமிழரை...

எழுப்பியுள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன்,

13ஆம் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த மல்வத்துபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரர், அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் தொடம்பான சந்திரசிறி தேரர், ராமாஞ்ஞ பீடத்தின் மகாநாயக்கர் மல்குலாவே விமலதேரர் ஆகியோருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

10 பக்கங்களில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு,

சிங்களவர்களால் நிர்வகிக்கப்படும் மத்திய அரசாங்கத்தின்கீழ் இருப்பதில் தமிழர்கள் திருப்தியடையவில்லை என்றும் அதனால் தம்மைத்தாமே நிர்வகிப்பதற்கான சுதந்திரத்தை வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்மக்களுக்கு வழங்காமல், அவர்களை சிங்களவர்களின் காலடியிலேயே வைத்திருக்கவேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்.

அத்தகைய எண்ணம்தான் இந்த நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையைத் தோற்றுவித்ததல்லவா? இன்னும் எவ்வளவு காலம் இந்த நாடு தமிழர்களுக்கு எதிரான போருக்குத் தயாராகப்போகின்றது? அதனை முன்னிறுத்தி இராணுவத்தினரை தயார் நிலையில் வைப்பதற்காக வெளிநாட்டுக் கையிருப்பில் பெருந்தொகையை செலவிடப்போகின்றது? அதேபோன்று சிங்களவர்கள் எதற்காக அஞ்சுகின்றார்கள்? வடக்கு - கிழக்குவாழ் தமிழர்கள் தனியாகப் பிரிந்து, தமது சொந்த “தமிழீழத்தை“ கட்டியெழுப்பிவிடுவார்கள் என்று அஞ்சுகின்றார்களா? அது எவ்வாறு சிங்களவர்களைப் பாதிக் கும்? வட, கிழக்கில் பெரும் எண்ணிக்கையான சிங்களவர்கள் இல்லை.

அவ்வாறிருக்கையில் தமிழர்களை கட்டுப்படுத்துவதற்கான சட்டபூர்வ உரித்து சிங்களவர்களுக்கு இல்லை என்பதை அறிந்திருப்பதால்தான் நீங்கள் இந்தப் பிளவு குறித்து கலங்குகின்றீர்களா? தமிழர்களை அடிபணியச்செய்வதற்கு (கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கு) அவர்கள்மீது அழுத்தமும், வன்முறையும் பிரயோகிக்கப்பட வேண்டும் என்று கருதுகின்றீர்கள் அல்லவா? இதனைத்தான் பௌத்தம் உங்களுக்குப் போதித்ததா? அகிம்சை என்பது இந்து, பௌத்தம் மற்றும் சமணம் ஆகிய மதங்களின் மிகமுக்கிய ஆன்மீகக் கோட்பாடாகும்.

எம்முடைய ஒற்றையாட்சி அரசமைப்பின்கீழ் வடக்கு, கிழக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதானது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரிவினைக்கு வழிவகுக்காது. ஆனால், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமையானது தீவிர உறுதிப்பாடின்மையைத் தோற்றுவித்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் 30 வருடகால யுத்தத்தை விடவும் மிக மோசமான எதையேனும் தோற்றுவிக்கின்றதா என்று பார்ப்பதற்காகவேனும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் அல்லவா? என்றும் கூறியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு பதிலளிக்காத திறைசேரி!

## நிதி இல்லாமையால் பெரும் திண்டாட்டம்

கொழும்பு, பெப். 10

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 770 மில்லியன் ரூபாவை வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு இதுவரை திறைசேரியிலிருந்து பதில் கிடைக்கவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

பெப்ரவரி மாதத்தில் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 770 மில்லியன் ரூபாவை விடுவிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா நிதி அமைச்சின் செயலாளரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், இதுவரை இதற்கான பதில் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அத்தியாவசிய அரச செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளை மட்டுமே வழங்குமாறு திறைசேரி செயலாளருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

அரச வருமான நிலைமை மேம்படும் வரை அரச சேவையைப் பேணுவதற்கு அத்தியாவசிய அரச செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மாத்திரம் வழங்குமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

முன்னர் மேற்கொள்ளப்பட்டது போன்று அரசாங்க நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு, மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் தடையாக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# ஜனாதிபதியின் உரையை வரவேற்கின்றார் டக்ளஸ்!

கொழும்பு, பெப். 10



எதிர்ப்புக்களுக்கு மத்தியில், ஒற்றையாட்சி முறைக்குள் அதிகப்பட்ச அதிகாரங்களோடு, இனப்பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் தெரிவித்ததை தான் வரவேற்கிறார் என, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் இந்திய மத்திய அரசின் மீன்வள அமைச்சர், இலங்கையின் கடற்றொழில் அமைச்சராகிய தன்னைச் சந்திப்பதற்கு விரும்பியுள்ளதாகவும், அவரை சந்தித்து பல விடயங்கள் தொடர்பில் தான் கலந்துரையாட உள்ளதாகவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். (அ)

# 4 அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைத்தது சதொச!

கொழும்பு, பெப். 10

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச 4 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இதன்படி, வட்டானா பருப்பு, ஒரு கிலோ கிராமின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 305 ரூபாவாகும்.

சிவப்பரிசி ஒரு கிலோகிராம் ஒன்றின் விலை 05 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 164 ரூபாவாகும்.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் இறக்குமதி செய்யப்படும் வெள்ளைப் பச்சை அரிசி விலை 05 ரூபா வினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 179 ரூபாவாகும்.

அவ்வாறே, ஒரு கிலோகிராம் வெள்ளை நாட்டரிசி விலை 04 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 180 ரூபாவாகும். (அ)

# எதிர்வரும் 17ஆம் திகதி பெரும் வேலைநிறுத்தம்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 10

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட வரி திருத்தத்தை அரசாங்கம் திரும்பப் பெறத் தவறினால், அடுத்த வாரம் பெரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக பல தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை ஆகிய தொழிற்சங்கங்கள் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் வங்கித் தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டன.

கடந்த வருடம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் புதிய திருத்தத்தை இரத்துச் செய்யுமாறு அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக அவை கோரி வருகின்றன.

அன்றாடச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இவ்வளவு அதிக வரி விதிப்பது நியாயமற்றது என தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

தங்களது கோரிக்கையை அரசாங்கம் தொடர்ந்தும் புறக்கணித்தால் எதிர்வரும் 17ஆம் திகதி மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவை எச்சரித்துள்ளன. (அ)

# கிணற்றில் தவறிவிழுந்து தவித்தவரை காப்பாற்றிய யாழ். சுகாதார பிரிவினர்!

யாழ்ப்பாணம், பெப். 10

கிணற்றில் விழுந்து சுமார் இரு மணி நேரமாக காப்பாற்ற யாருமின்றி தவித்து நின்றவரை யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் காப்பாற்றினர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் - சங்கிலியன் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அந்த வீதியில் வீடு ஒன்றில் பெண் ஒருவர் கிணற்றில் தண்ணீர் அள்ளியபோது கால் வழுக்கியதில் கிணற்றில் விழுந்துள்ளார். வீட்டில் வேறு எவரும் இல்லாத நிலையில் காப்பாற்ற யாருமற்ற நிலையில் அவர் கிணற்றிலிருந்த குழாய் ஒன்றைப் பிடித்தவாறு அபயக் குரல் எழுப்பியிருந்தார்.

அயல் வீடுகளிலும் ஆட்கள் இல்லாத நிலையில் சுமார் 2 மணி நேரமாக அப்பெண் உதவிக் குரல் எழுப்பியுள்ளார். இந்த சமயம் டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் செயல்பாட்டுக்காக அப்பகுதிக்கு சென்றிருந்தனர் யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர்.

அந்தப் பெண்ணின் அயல் வீட்டிலும் ஆட்கள் வந்த நிலையில் கிணற்றில் விழுந்தவரின் உதவிக் குரலை கேட்டு அந்த வீட்டுக்கு சென்று அந்தப் பெண்ணை கிணற்றில் குதித்து காப்பாற்றினர் யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் உத்தியோகத்தர்கள்.

யாழ்ப்பாணம் மருத்துவ அதிகாரி பிரிவினரின் இந்த செயலுக்கு அவர்களுக்கு பலரும் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர். (ஐ)

# பெப்ரவரி முதல் வாரத்தில் மட்டும் 26,500 சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, பெப். 10

இந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் 26,506 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி வரை வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 129,051 ஆகும்.

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் 120,545 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெப்ரவரி முதல் வாரத்தில் வந்த சுற்றுலாப் பயணிகளில் 25 வீதம் ரஷ்யர்கள் ஆவர். (அ)

# மரண அறிவித்தல்



## கந்தையா கணேஸ்வரன்

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கணேஸ்வரன் கடந்த 05-02-2023 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா - சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற தில்லை நடேசன் - பத்மாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், கலையரசி அவர்களின் அன்புக் கணவரும், பவின், பவிசன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,ராசாத்தி, ரஞ்சினி, ரதிரஞ்சிதம், ஜெயலக்ஷ்மி, சுபாசினி, கவிதா, காலஞ்சென்ற கேதிஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கமலேஸ்ஹன், கமலரூபன், கமலகுமார், அகலியா, பகீரதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலேஸ்வரன், குலதரன், பகீரதன், கோபிகரன், ஜெயக்குமார், நந்தா, கேதிஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,தமிழினி, ஜீவபாசனி, ஜெயதீபன், சுவேந்தினி, யசிந்தா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 13.02.2023 திங்கட்கிழமை காலை 9.00 முதல் நண்பகல் 12.00 மணியளவில் அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மைத்துனர்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.